வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

ஈழநாடு
Eelanadu — ඊළනාඩු




Email : eelanaduweekly@gmail.com   மலர் : 05   13.05.2024 திங்கட்கிழமை   இதழ் : 134   பக்கங்கள் : 12

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில் சர்வதேச மன்னிப்பு சபை செயலாளர்!

## வியாழனன்று இலங்கை வருகிறார்

கொழும்பு, மே. 13

**மூன்று தசாப்த கால யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு 15 வருடங்கள் கடந்திருக்கும் நிலையில், இவ்வாரம் இலங்கைக்கு வருகைதரவுள்ள சர்வதேச மன்னிப்புச் சபையின் செயலாளர் நாயகம் அக்னெஸ் கலமார்ட் எதிர்வரும் 18ஆம் திகதி முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்விலும் கலந்துகொள்ளவுள்ளார்.**



யுத்தத்தின்போது இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் மற்றும் மனிதகுலத்துக்கு எதிரான வன்முறைகள் என்பன தொடர்பில் உண்மை, நீதி மற்றும் பொறுப்புக்கூறல் என்பன உறுதிப்படுத்தப்பட வேண்டும் என சர்வதேச மன்னிப்புச் சபை தொடர்ச்சியாக வலியுறுத்தி வருவதுடன், சர்வதேச அரங்கில் இலங்கை மீதான அழுத்தங்களையும் பிரயோகித்துவருகிறது.

அந்த வகையில் யுத்த முடிவின் 15 வருடப் பூர்த்தியையொட்டி லண்டனைத் தளமாகக் கொண்டு இயங்கி வரும் சர்வதேச மன்னிப் புச் சபையின் செயலாளர் நாயகம் அக்னெஸ் கல மார்ட் எதிர்வரும் வியாழக்கிழமை இலங்கைக்கு

11

## முள்ளிவாய்க்கால் நினைவுக்கு திருமலையில் நீதிமன்ற தடை!

திருமலை, மே. 13

திருகோணமலை சம்பூர் பொலிஸ் பிரிவில் உள்ள சேனையூர் பகுதியில், பொதுமக்கள் சிலர் முள்ளிவாய்க்கால் கஞ்சி காய்ச்சிக் கொண்டிருந்தபோது சம்பூர் பொலிஸார் அங்கு வந்து நீதிமன்ற தடையுத்தரவைக் காட்டி தடுக்க முற்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை பகல் இடம்பெற்றுள்ளது.

இதன்போது அங்கிருந்தோர் பொலிஸாரால் வழங்கப்பட்ட நீதிமன்ற தடையுத்தரவை பெறுவதற்கு மறுத்ததோடு, வேறும் யாரையும் நாம் நினைவு கூரவில்லை. உயிரிழந்த எமது மக்களுக்காகவே இதனை செய்கின்றோம் என பொலிஸாரோடு வாக்குவாதத்தில் ஈடுபட்டதால் அப்பகுதியில் பதற்றம் நிலவியது. (அ)



## வவுனியாவில் முள்ளிவாய்க்கால் நினைவுதினம் நேற்று அனுஷ்டிப்பு

வவுனியா, மே 13

வவுனியாவில் போராளிகள் நலன்புரிச் சங்கத்தினரால் முள்ளிவாய்க்கால் நினைவுதினம் நேற்றுக் காலை வவுனியா தனியார் விருந்தினர் விடுதியில் அனுஷ்டிக்கப்பட்டது.

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையில் உயிரிழந்தவர்களுக்கு இதன்போது பொதுச்சுடர் ஏற்றப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டதுடன் நினைவுத்தூபிக்கு மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது.

அத்துடன், முன்னாள் போராளிகளின் குடும்ப உறுப்பினர்களுக்கு உதவித் திட்டங்கள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் முன்னாள் பாராளுமன்ற

11

## கப்பல் சேவை மீண்டும் ஒத்திவைப்பு!

கொழும்பு, மே. 13

தமிழ்நாடு நாகையில் இருந்து இலங்கை காங்கேசன்துறைக்கு இன்று ஆரம்பமாக இருந்த கப்பல் போக்குவரத்து சேவை மீண்டும் தள்ளிவைக்கப்பட்டுள்ளது.

நாகையில் இருந்து இலங்கை காங்கேசன் துறைக்கு கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் 14 ஆம் திகதி முதல் கேரள மாநிலம் கொச்சியில் இருந்து "செரியாபாணி" என்ற பயணிகள் கப்பல் இயக்கப்பட்டது.

வடகிழக்கு பருவமழை காரணமாக கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் 23 ஆம் திகதியுடன் இந்த பயணிகள் கப்பல் போக்குவரத்து நிறுத்தப்பட்டது.

11

## சம்பூரில் முள்ளிவாய்க்கால் கஞ்சி காய்ச்சிய மக்களை மிரட்டிய பொலிஸ்!

திருமலை, மே. 13

திருகோணமலை சம்பூர் பொலிஸ் பிரிவில் முள்ளிவாய்க்கால் நினைவுக்கஞ்சி காய்ச்சிக் கொண்டிருந்த பொதுமக்களை தடையுத்தரவை காண்பித்து பொலிஸார் மிரட்டிய சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளது.

சேனையர் பகுதியில் நேற்று மதியம் முள்ளிவாய்க்கால் நினைவுக் கஞ்சி காய்ச்சிக்கொண்டு இருந்தபோது அங்கு வந்த பொலிஸார் நீதிமன்ற தடை உத்தரவைக் காட்டி அச்சுறுத்தி தடுக்க முற்பட்டதாகவும் தெரிய வருகின்றது.

இதன்போது நாங்கள் வேறு யாரையும் நினைவு கூரவில்லை. உயிரிழந்த பொது மக்களுக்காகவே இதனை செய்கின்றோம் எனக் கூறி

11

## நாட்டின் பொருளாதார வளர்ச்சியை 3 வீதமாக அதிகரிக்க எதிர்பார்ப்பு

### கூறுகிறார் ஜனாதிபதி ரணில்

கொழும்பு, மே. 13

2025ஆம் ஆண்டில் நாட்டின் பொருளாதார வளர்ச்சியை 3 சதவீதமாக அதிகரிப்பதற்கு எதிர்பார்த்துள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

சர்வதேச அன்னையர் தின நிகழ்வு ஜனாதிபதி தலைமையில் நேற்று இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனை குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை பொருளாதார வளர்ச்சி வேகத்துடன்

11

பதவியிலிருந்து விலகினார் மைத்திரி

## சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் விஜயதாஸ ராஜபக்ஷ


கொழும்பு, மே 13

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைப் பதவியிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ளார்.

இதேவேளை, சுதந்திரக் கட்சியின் புதிய தலைவராக நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவை நியமிப்பதற்கு கட்சியின் செயற்குழு ஏகமனதாக தீர்மானித்துள்ளது.

## "பொருளாதார வளர்ச்சியை அதிகரிப்பதுதான் ஒரே வழி"

கொழும்பு, மே 13



பணத்தை அச்சிட மாட்டோம் என்று சர்வதேச நாணய நிதியத்துடன் ஒப்பந்தம் செய்துள்ளோம். அப்படியானால் பொருளாதார வளர்ச்சி விகிதத்தை அதிகரிப்பதுதான் நமக்கு இருக்கும் ஒரே வழி- இவ்வாறு ஜனா திபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

11

தமிழ் பொது வேட்பாளர் அவசியம்

## தமிழ்த் தேசிய கட்சிகளுடன் சிவில் சமூகத்தினர் சந்திப்பு

யாழ்ப்பாணம், மே 13

தமிழ்த் தேசியத் தளத்திலுள்ள அரசியல் கட்சிகளுடனான பேச்சுக்களை விரைவில் ஆரம்பிப்பதற்கு சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய செயற்குழு திட்டமிட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதற்காக அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புக்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய பொதுக்கட்டமைப் பு

11

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது

இப்போதெல்லாம் யார் தொலைபேசி அழைப்பை எடுத்தாலும், அந்த ஒரு விடயம் பற்றியே பேசுகிறார்கள் அல்லது கேள்வி கேட்கிறார்கள்.

ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொதுவேட்பாளர் தொடர்பாக அதிகம் பேசுவது ஈழநாடு பத்திரிகையும் அதன் குழுமத்தைச் சேர்ந்த டான் ரி.வியும்தான் என்பது தெரிந்ததுதான். அதனால் இந்த ஊர்க்குருவியுடன் பேசுகின்றவர்கள் பலரும் அனேகமாக எல்லோருமே கேட்பது, அது சாத்தியமாகுமா என்பது பற்றித்தான்.

நேற்று லண்டனிலிருந்து பேசிய நீண்டகால நண்பர் ஒருவர், அங்கு நடந்த ஒரு கூட்டத்தில் தான் சந்தித்த சிலர், அதுபற்றி கலந்துரையாடியதாகவும், அவர்களில் ஒருவர், இந்த விடயத்தில் ஈழநாடு - டான் ரி.வி அக்கறைகாட்டுவது தான் சந்தேகத்தை தருகின்றது என்றாராம். அவர் அப்படி தெரிவித்தபோது அங்கிருந்த வேறு சிலரும் அதனை ஆமோதிப்பது போல பேசியதாகவும் கூறினார் நண்பர்.

அவரது சந்தேகம் நம்மால் தீர்த்து வைக்கக்கூடியது அல்ல.

அவர் தனது தலைவர்கள் அல்லது நம்பிக்கைக்குரியவர்கள் என்று நினைக்கின்றவர்களின் மறுபக்கம் - அல்லது அவருக்குத் தெரியாத பக்கத்தையும் எங்களுக்குத் தெரியும் என்று அவருக்கு சொல்லுங்கள் என்றேன்.

ஈழநாடுவின் நோக்கம் இப்படி பொது வேட்பாளர் ஒருவரை களம் இறக்குவது ரணிலை வெல்லவைக்க என்கிறார்கள் சிலர். இன்னும் சிலரோ, அநுரகுமாரவிற்குத்தான் வடக்கு,கிழக்கு தமிழர்கள் வாக்களிக்கப்போவதில்லை, அப்படியெனில் பொதுவேட்பாளரால் நேரடியாக நன்மையை பெற விருப்பவர், அவர்தானே. இது சீனாவை மகிழ்ச்சிப்படுத்துவதற்கான மறைமுக வேலைத்திட்டம் என்கிறார்கள் சிலர்.

இவர்கள் சொல்ல வருவது என்ன? ஏதோ ஒரு சிங்கள வேட்பாளருக்கு கிடைக்கவிருக்கும் வாக்குகளை கிடைக்காமல் பண்ணுவதற்கான முயற்சி என்கிறார்கள். அவர்கள் இப்படிச் சொல்வதன் மூலம், இன்னுமொரு சாரார் முன்வைக்கும் ஒரு பிரதான குற்றச்சாட்டையே தகர்த்துவிடுகிறார்கள்.

தமிழ் பொது வேட்பாளருக்கு தமிழ் மக்கள் வாக்களிக்காமல் விட்டால், இதுநாள்வரை நடந்து வந்த அனைத்துப் போராட்டங்களுமே பயனற்றதாகிவிடும் என்றும் தமிழ் மக்களே, தமது கோரிக்கைகளை நிராகரித்துவிட்டார்கள் என்று தெற்கும் சர்வதேச சமூகமும் ஏளனம் செய்யுமே என்று எச்சரிக்கை விடும் பாணியில் சிலர் கருத்துச் சொல்லி வருகின்றனர்.

அவ்வாறு சொல்பவர்கள், எதற்காக ரணிலை வெல்லவைப்பதற்கான முயற்சி என்கிறார்கள் என்பது கேள்வியாகிவிடுகின்றது. தமிழ் மக்கள் சிங்கள வேட்பாளருக்கு வாக்களிக்க இருப்பதை தடுப்பதற்கான முயற்சி இது என்கின்றனர் சிலர், வேறு சிலர், தமிழ் மக்கள் வாக்களிக்காமல் விட்டுவிட்டால் அது நமது போராட்டத்தை மழுங்கடிக்கச் செய்துவிடுமே என்கின்றனர் வேறு சிலர். இரண்டும் ஒன்றை யொன்று முரண்நகையானவை.

இவற்றை விடுவோம், ஈழநாடு-டான் ரிவிக்கு அவர்கள் சொல்வது போல, மறைமுக "அஜன்டா" இருக்கின்றது என்றே வைத்துக் கொள்ளுவோம்.

ஒரு வேட்பாளரை நிறுத்தி, அவர் என்ன கோரிக்கைக்காக போட்டியிடுகிறார் என்பதையும் தீர்மானித்த பின்னர், அதனை மக்கள் மத்தியில் எடுத்துச் செல்ல- பிரச்சாரம் செய்ய ஊடகங்களின் உதவி தேவைதானே?.

வேட்பாளர் யார் என்பதையோ, அல்லது என்ன கோரிக்கையை முன்வைத்து அவர் போட்டியிடுகின்றார் என்பது பற்றி முடிவெடுப்பதிலோ ஈழநாடுவோ, டான் ரிவியோ எந்த விருப்பத்தையும் இதுவரை தெரிவிக்கவில்லை. எமது கோரிக்கை எல்லாம் தமிழ் மக்கள் ஒற்றுமையாக ஒரு தேசமாக நிற்கிறார்கள் என்பதை வெளிப்படுத்த இதைவிட சிறந்த சந்தர்ப்பம் இல்லை என்பதுதான்.

கோரிக்கை எந்த உட்சபட்ச கோரிக்கையாகவும் இருக்கலாம். யார் வேண்டுமானாலும் வேட்பாளராகவும் இருக்கலாம் என்றுதானே ஈழநாடு திரும்பத் திரும்ப எழுதி வருகின்றது. அதாவது இந்த விடயத்தில் எந்த விருப்பு வெறுப்புக்களையும் திணிக்க முன்வரவில்லையே.

அப்படியெனில் நீங்கள் தெரிவுசெய்கின்ற வேட்பாளரையும், அந்தக் கோரிக்கைக்கான மக்கள் ஆதரவையும் பெறுவதற்கு முன்னணி ஊடகங்கள் என்ற வகையில் உங்களுக்கு உதவ முன்வருவதை எதற்காக நீங்கள் விரும்பவில்லை?

அப்படியெனில் நீங்களே அந்த முயற்சியை தோல்வி அடையச் செய்யவேண்டும் என்பதுதான் உங்கள் மறைமுக திட்டமா என்று கேட்காமல் இருக்கமுடியவில்லை.

அதிகம் ஏன், கடந்த பாராளுமன்ற தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்களில் அனேகமாக எல்லாக்கட்சிகளையும் சேர்ந்த வேட்பாளர்களும் பணம்கொடுத்து விளம்பரம் செய்யவேண்டிய தேவை எதனால் ஏற்பட்டது?

இதனை எழுதிக்கொண்டிருக்கும் போது ஒருநண்பர் முகநூலில் வந்த பதிவு ஒன்றை அனுப்பியிருந்தார். அதில் வடிவேலு பாணியில் ஒருவர் எழுதுகிறார்:

"குகநாதனும் யதீந்திராவும் யாருடைய வழிகாட்டலில் இயங்குபவர்கள் என்பது பலருக்கு தெரியாது. வரும் ஜனாதிபதி தேர்தலில் கோட்டாபய மகிந்த குடும்பத்தை மீண்டும் கொண்டு வருவதற்காகவே இந்த தமிழ் பொது வேட்பாளர் திட்டத்தை கையில் எடுத்துள்ளார்கள். இதன் மூலம் ரணில் அரசாங்கத்திற்கு இருக்கும் தமிழர்களது ஒட்டுக்களை திசை திருப்பி மஹிந்த குழுமத்தை வெல்ல வைப்பதற்கான நிழல் ஏற்பாடு இதுவாகும்?".

அட மகிந்தவே ரணிலை எப்படி வெல்லவைப்பது என்று தலையை உடைத்துக்கொண்டிருக்கிறார். இவர்கள் எல்லாம் அரசியல் கருத்துச்சொல்வது வடிவேலு திரைப்படங்களில் பேசுகின்ற நகைச்சுவையை மிஞ்சிவிடுகின்றது.!

- ஊர்க்குருவி.

# வாகன இறக்குமதிக்கு அடுத்த வருடம் அனுமதி

### நிதி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு



அநுராதபுரம், மே 13

வாகன இறக்குமதியை அடுத்த வருடம் முதல் மீண்டும் ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படுவதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

அநுராதபுரத்தில் செய்தியாளர்களுக்கு ஷெஹான் கருத்து தெரிவித்த போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார். படிப்படியாக திட்டமிட்டு வாகன இறக்குமதியை மேற்கொள்ளவுள்ளதாக அவர் கூறினார்.

தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்களுக்கு வாகனங்களை இறக்குமதி செய்ய அரசாங்கம் அனுமதி வழங்குவதில்லை. இதுவரை வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான அனுமதி வணிகத் தேவைகளுக்கு மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. அதாவது பொருளாதாரத்துக்கு சில பங்களிப்புச் செய்வதற்காக பொருளாதாரச் செயல்முறை மற்றும் வணிகச் செயல்முறையில் ஈடுபடுபவர்களுக்கு மட்டுமே இதுவரை அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தனியார் பாவனைக்காக இறக்குமதி செய்யப்படும் வாகனங்களுக்கே தற்போது கட்டுப்பாடு உள்ளது. அடுத்த வருடத்தில் இந்தக் கட்டுப்பாடு தளர்த்தப்படும் என எதிர்பார்க்கிறோம். எனினும் படிப்படியாகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மேலும், நாட்டில் தற்போதுள்ள பொருளாதார வேலைத்திட்டத்தை தவிர வேறு மாற்று வழிகள் இல்லை என்றும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார். (எ)

# வட்ஸ்அப் குரூப்பில் வினாத்தாள் தனியார் வகுப்பு ஆசிரியர் கைது

கண்டி, மே 13

க. பொ. த. சாதாரண தர ஆங்கில மொழி வினாத்தாளை படம் எடுத்து வட்ஸ்அப் குரூப்களில் வெளியிட்ட சம்பவம் தொடர்பில் தனியார் வகுப்பு ஆசிரியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் விசேட புலனாய்வுப் பிரிவினர் இந்த ஆசிரியரை கண்டியில் வைத்து நேற்றுக் காலை கைது செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

க. பொ. த. சாதாரண தர பரீட்சையின் ஆங்கில வினாத்தாள் கடந்த 9 ஆம் திகதி நடைபெற்றதுடன், கால அட்டவணைப்படி காலை 8. 30 மணிக்கு மாணவர்களுக்கு வினாத்தாள் வழங்கப்பட்டது.

எனினும், சந்தேகத்துக்குரிய இந்த ஆசிரியரால் காலை 9. 11 மணியளவில் வட்ஸ்அப் குழுவில் ஆங்கில வினாத்தாள் வெளியிடப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரான தனியார் வகுப்பு ஆசிரியர் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார்.

சம்பவம் தொடர்பில் பரீட்சை திணைக்கள அதிகாரிகளிடமும் வாக்கு மூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பிரதிப் பொலிஸ் மா அதிபர் ரொஹான் பிரேமரத்னவின் மேற்பார்வையில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் விசேட புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

2023 ஆம் ஆண்டுக்கான க. பொ. த. சாதாரண தர பரீட்சை கடந்த 06 ஆம் திகதி ஆரம்பமாகி எதிர்வரும் 15 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. (எ)

# மகன்மீது துப்பாக்கிச் சூடு; தந்தை தலைமறைவு

சூரியவெவ, மே 13

தந்தையின் துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்த மகன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளதாக சூரியவெவ பொலிஸார் தெரிவித்தனர் .

இந்த துப்பாக்கிச் சூடு சம்பவம் சூரியவெவ வெவேகம பிரதேசத்தில் இடம்பெற்றதாக பொலிஸார் கூறினர்.

தந்தைக்கும் மகனுக்கும் இடையில் ஏற்பட்ட வாக்கு வாதத்தின் போது போதையிலிருந்த தந்தை துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளார்.

துப்பாக்கிச் சூடு நடத்திய தந்தை தப்பிச் சென்றுள்ளதுடன் மகனின் இடது காலில் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

# பாதுகாப்பற்ற கிணற்றில் விழுந்து நான்கு வயது குழந்தை உயிரிழப்பு

மெதகம, மே 13

மெதகம, ஈரியகஹமட பிரதேசத்தில் பாதுகாப்பற்ற கிணற்றில் விழுந்து குழந்தையொன்று உயிரிழந்தது.

ஈரியகஹமட கெதவின்ன பிரதேசத்தை சேர்ந்த 4 வயது குழந்தையே இவ்வாறு உயிரிழந்தது.

வீட்டுக்கு அருகிலுள்ள பாதுகாப்பற்ற கிணற்றில் குழந்தை விழுந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மெதகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# பால் போத்தலில் கைக்குண்டுகள், ரவைகள் வைத்திருந்தவர் கைது!

வெலிப்பன்ன, மே 13

வெலிப்பன்ன, நாவுட்டுடுவ பகுதியில் வீடொன்றில் குழந்தைகளுக்கு பாலூட்டும் பால் போத்தலில் மறைத்து வைக்கப்பட்டிருந்த இரண்டு கைக்குண்டுகள் மற்றும் ரவைகளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வெலிப்பன்ன பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மேல் மாகாண புலனாய்வு அதிகாரிக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் இவர் கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்ட நபர் சுற்றுலா வர்த்தகத்தில் ஈடுபடும் சாரதி என்பதுடன் இவரிடமிருந்து வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட இரண்டு கைக்குண்டுகள், ரவைகள் என்பன கைப்பற்றப்பட்டன. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
13.05.2024 திங்கட்கிழமை
குரோதி வருடம், சித்திரை 30

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம் உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# காலம் எவ்வாறு மாறியிருக்கின்றது?

இலங்கையின் ஓய்வு பெற்ற இராணுவத்தினர் சிலரை, ரஷ்யாவுக்கு கடத்தியிருப்பதாக ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி ஒருவர் கைது செய்யப்பட்டிருக்கின்றார். இவ்வாறு ரஷ்யாவுக்கு கடத்தப்பட்ட இராணுவத்தினர், உக்ரைனுக்கு எதிரான போரில், கூலிப்படையினராக பயன்படுத்தப்பட்டிருக்கின்றனர் - அதேவேளை, முன்னரங்கில் ட்ரோன் தாக்குதலில் கொல்லப்படுவதற்கு பயன்படுத்தப்படுவதாகவும் தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.

விடுதலைப் புலிகள் இயக்கத்தை யுத்தத்தில் அழித்த தேசிய வீரர்களாக போற்றப்படும் இராணுவத்தினர், பிறிதொரு நாட்டின் யுத்தத்தில் கூலிப்படையினராக அதுவும் முன்னரங்கில் பலியாடுகளாக பயன்படுத்தப்படும் நிலைமையானது அவர்களின் தேசிய வீரர்கள் என்னும் தகுதி நிலைக்கு முற்றிலும் மாறானதாகும். இலங்கையின் தேசிய வீரர்கள் எவ்வாறு பிறிதொரு நாட்டின் யுத்தத்தில் கூலிப்படையினராக இணைகின்றனர்? இந்த நிலைமையை எவ்வாறு புரிந்து கொள்வது?

விடுதலைப் புலிகள் யுத்தத்தில் தோற்கடிக்கப்பட்ட பின்னர், அந்த இயக்கத்தில் இருந்தவர்கள் வீரர்களாக - கதாநாயகர்களாக போற்றப்பட்டவர்கள் ஒரே நாளில் தங்கிவாழும் நிலைக்கு தள்ளப்பட்டனர். அனைத்துக்கும் அஞ்சி வாழும் நிலையை எதிர்கொண்டனர். சொந்த சமூகத்திலேயே அந்நியர்கள் போன்ற நிலையை அடைந்தனர். தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து, ஜனநாயக நீரோட்டத்தில் இணைந்து கொள்ள விரும்பிய போது, நீங்கள் எல்லோரும் இராணுவ புலனாய்வுப் பிரிவிற்கு பணியாற்றுபவர்கள் என்றவாறு கூறி, அவமானப்படுத்தப்பட்டனர்.

அப்போதெல்லாம் சிங்கள மக்கள் மத்தியில் இராணுவத்தினர் தேசிய வீரர்களாக போற்றப்பட்டுக் கொண்டிருந்தனர். ஆனால், இன்று அவ்வாறானவர்களே நாட்டில் வாழ முடியாதென்னும் நிலையால், பிறிதொரு நாட்டுக்கு கூலிப்படையினராக கடத்தப்படும் நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. அந்தளவிற்கு நாடு பொருளாதார ரீதியில் அதல பாதாளத்தை எட்டியிருக்கின்றது. இதிலிருந்து மீண்டெழும் நிலையை காணாவிட்டால் இது போன்று இன்னும் பலவாறான அவலங்களை நாடு காண நேரிடலாம்.

ஆனால் இவ்வாறானதொரு நிலையில் கூட, நாட்டின் அடிப்படையான பிரச்னைகளுக்கு தீர்வு காணும் நோக்கில் ஆட்சியாளர்கள் சிந்திக்கவில்லை. தேசிய இனப்பிரச்னைக்கு தீர்வு காணும் வழி முறைகளை வெளிப்படையாக முன்வைக்கும் நிலையில் இல்லை. தேசிய இனப்பிரச்னைக்கான தீர்வு தொடர்பில் சிங்கள மக்கள் மத்தியில் போலியான கருத்துக்களையும் நம்பிக்கைகளையும் விதைத்ததன் காரணமாகவே நாடு இவ்வாறானதொரு நிலைக்குள் சிக்கியிருக்கின்றது. இலங்கைத் தீவை மாறி, மாறி ஆட்சி செய்த அனைத்து சிங்கள ஆட்சியாளர்களும் இதற்கான பொறுப்பாளிகளாவர். யுத்தமும் அழிவுகளும் இந்த நிலைமையின் விளைவுகள்தான்.

யுத்த வெற்றியின் பின்னரான அரசியல் சூழலில் முதலில் செய்யப்பட்டிருக்க வேண்டியது - யுத்தத்திற்கான காரணங்களை இல்லாதொழிக்கும் நோக்கில், அரசியல் மாற்றங்களை ஏற்படுத்தியிருக்க வேண்டும் ஆனால், யுத்த வெற்றியை தங்களது சாதனையாக காண்பித்து, சிங்கள தேசியவாதத்தின் புதிய காவலர்களாக காட்சிப்படுத்தினர். இதன் விளைவாக நாடு மேலும் புதிய நெருக்கடிக்குள் சிக்கியது. இவை அனைத்தினதும் ஒட்டுமொத்த விளைவுகளையே நாட்டின் அனைத்து மக்களும் எதிர்கொண்டிருக்கின்றனர். இந்த யதார்த்தத்தை சிங்கள ஆளும் வர்க்கம் புரிந்து கொண்டால் மட்டுமே, செழிப்பான எதிர் காலத்தை மக்கள் காண முடியும்.

# வடக்கு மாகாண ஆசிரியர் சேவையில் தொல்லியல் பட்டதாரிகள் புறக்கணிப்பு

யாழ்ப்பாணம், மே 13

ஆசிரியர் சேவைக்குள் பட்டதாரிகளை இணைத்துக்கொள் வதற்காக தற்போது மேற்கொள்ளப்பட்ட ஆட்சேர்ப்பின்போது வடக்கு மாகாணத்தில் மாத்திரம் தொல்லியல் துறை பட்டதாரிகள் புறக்கணிக்கப்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்ட பட்டதாரிகள் கவலை தெரிவித்துள்ளதோடு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தொல்லியல் துறையில் படித்து பட்டம் பெற்றவர்களின் எதிர்காலம் கேள்விக்குள்ளாகியுள்ளது எனவும் தெரிவித்துள்ளனர்.

பட்டதாரிகளை ஆசிரியர் சேவைக்குள் உள்வாங்குவதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன. இந்த விண்ணப்ப கோரலின் போது வடக்கில் தொல்லியல் பட்டதாரிகள் தவிர்க்கப்பட்டே விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன.

இருப்பினும், தொல்லியல் பட்டதாரிகளை வரலாறு பாடத்துக்கு ஆட்சேர்ப்பு செய்வார்கள் என்ற நம்பிக்கையில் சில தொல்லியல் பட்டதாரிகளும் விண்ணப்பித்திருந்தனர். இதற்கமைவாக 30. 03. 2024 நடந்த ஆட்சேர்ப்பு பரீட்சையில் அவர்கள் சித்தியடைந்து 24. 04. 2024 நேர்முகத்தேர்வுக்கு அழைக்கப்பட்டிருந்தனர். ஆனால் 09. 05. 2024 அன்று வெளியான நேர்முகத் தேர்வு முடிவுகளில் தொல்லியல் பட்டதாரிகள் நீக்கப்பட்டிருந்தமை தெரியவந்தது.

கடந்த 2018ஆம் ஆண்டு பட்டதாரிகளை ஆசிரியர் சேவைக்குள் உள்வாங்கும் திட்டத்தின் போது தொல்லியல் பட்டதாரிகளும் உள்வாங்கப்பட்டு, அவர்கள் தெரிவு செய்யப்பட்டு, தற்போது வடக்கில் உள்ள பல பாடசாலைகளில் வரலாறு பாட ஆசிரியர்களாக உள்ளனர் எனக் கூறியுள்ளனர்.

மேலும் அவர்கள், இவ்வருடமே தொல்லியல் பட்டதாரிகள் வடக்கில் மாத்திரம் புறக்கணிக்கப்பட்டுள்ள தாகவும், நாட்டின் ஏனைய மாகாணங்களில் தொல்லியல் துறை பட்டதாரிகள் ஆசிரிய சேவைக்குள் உள்வாங்கப்பட்டுள்ளத ாகவும் தெரிவித்தனர்.

எனவே, இது தொடர்பில் வடக்கு மாகாண பிரதம செயலாளர் இ. இளங்கோவனுடன் தொடர்பு கொண்டு வினவியபோது, வடக்கு மாகாணத்தில் பட்டதாரிகளை ஆசிரிய சேவைக்குள் உள்வாங்கும் வர்த்தமானி அறிவித்தலில் தொல்லியல் துறை பட்டதாரிகள் சேர்த்துக்கொள்ளப்படவில்லை எனத் தெரிவித்த அவரிடம் கடந்த 2018ஆம் ஆண்டு உள்வாங்கப்பட்டது என்றும் ஏன் இவ்வருடம் உள்வாங்கப்படவில்லை என வினவியபோது இது தொடர்பில் மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளரை தொடர்பு கொள்ளுமாறு தெரிவித்தார்.

வடக்கு மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் எஸ். திருவாகரனை தொடர்பு கொண்டு வினவிய போது, வடக்கு மாகாணத்தில் தொல்லியல் துறையில் வெற்றிடங்கள் இன்மையால் ஆட்சேர்ப்பு செய்யவில்லை என்றும் வரலாறு பாட ஆசிரியர் பதவிக்கு தொல்லியல் துறை பட்டதாரிகள் உள்வாங்கப்படுவதாக இருப்பின் அவர்கள் தங்களின் பாடத்தில் மூன்றில் ஒன்று என்ற அடிப்படையில் சம்பந்தப்பட்ட பாடங்களை கற்றிருக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழகத்தில் தொல்லியல் துறையில் பட்டதாரிகளாக வெளிவரும் பட்டதாரிகளை மத்திய அரசின் கீழ் இயங்கும் தொல்லியல் திணைக்களம், அருங்காட்சியகம் போன்றவற்றுக்கு உள்வாங்கப்படுவதில்லை. இப்போது ஆசிரியர் சேவைக்குள்ளும் உள்வாங்காது தவிர்க்கப்பட்டிருப்பதனால் எங்களின் எதிர்காலம் கேள்விக்குள்ளாகியுள்ளது என்று பட்டதாரிகள் கவலையோடு கூறினர். (எ)

# தமிழரசுக் கட்சியினரால் நெல்லியடியில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு

நெல்லியடி, மே. 13

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை வாரம் ஆரம்பத்தை முன்னிட்டு இலங்கை தமிழரசுக் கட்சியினரால் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு நேற்று காலை இடம்பெற்றது.

அதன்படி இந்த நிகழ்வு நெல்லியடி பேருந்து நிலையத்தின் அருகில் இலங்கை தமிழரசுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தலைமையில் இடம்பெற்றது.


முள்ளிவாய்க்கால் கஞ்சி காய்ச்சப்பட்டு பயணிகள், வர்த்தகர்கள், பொதுமக்களுக்கு வழங்கப்பட்டது.

இலங்கை தமிழரசுக் கட்சி முன்னாள்



மாகாண சபை உறுப்பினர் சந்திரலிங்கம் சுகிர்தன், தமிழரசு கட்சி பருத்தித்துறை தொகுதி நிர்வாகிகளான பிரசாத், தயாபரன், உட்பட தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். (அ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைகாசி - 13 சனிக்கிழமை
குரோதி வருடம் - சித்திரை 30
நல்ல நேரம் : 07.24 - 08.54
ராகு காலம் : 11.54 - 01.24
திதி : ஷஷ்டி



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்புக் கூடும். விருந்தினர்களின் வருகையால் வீடு களை கட்டும். பேச்சில் முதிர்ச்சி தெரியும். சொத்துப் பிரச்னைக்கு சுமுகத் தீர்வு கிடைக்கும்.

**இடபம்**
கணவன் - மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். புது முடிவுகள் எடுப்பீர்கள். நீண்ட நாள் பிரச்னைகளுக்கு தீர்வு காண்பது நல்லது. விலை உயர்ந்தப் பொருட்கள் வாங்குவீர்கள்.

**மிதுனம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சிக்கலான சவாலான காரியங்களையெல்லாம் கையில் எடுத்துக் கொண்டிருக்காதீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் அவ்வபோது டென்ஷன் ஆவீர்கள்.

**கடகம்**
குடும்பத்தில் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது. சகோதர வகையில் மனத்தாங்கல் வந்து நீங்கும். பழைய கடனைத் தீர்க்க முயற்சி செய்வீர்கள். உடல்நலத்தில் கவனம் தேவை.

**சிம்மம்**
குடும்பத்தில் ஒற்றுமை பிறக்கும். மற்றவர்களின் மனநிலையை உணர்ந்து பேசும் பக்குவம் உண்டாகும். பயணங்களால் புத்துணர்ச்சி பெறுவீர்கள். புது தொழில் தொடங்குவீர்கள்.

**கன்னி**
உங்களின் இலக்கை நோக்கி முன்னேறுவீர்கள். உடன்பிறந்தவர்கள் உங்களிடம் முக்கிய விஷயங்களை பகிர்ந்துக் கொள்வார்கள். விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள்.

**துலாம்**
குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். புதியவர்கள் நண்பர்களாவார்கள். நேர்மறை எண்ணங்கள் பிறக்கும். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும். முயற்சிகள் பலிதமாகும்.

**விருட்சிகம்**
பிறரிடம் கைமாற்றாக பணம் வாங்க வேண்டி வரும். பிள்ளைகளிடம் கோபத்தை காட்டாதீர்கள். வியாபாரத்தில் இழப்புகள் ஏற்படும். உத்தியோகத்தில் மறைமுக தொந்தரவுகள் வந்து நீங்கும்.

**தனுசு**
சகோதர வகையில் ஒற்றுமை பிறக்கும். கேட்ட இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும். விலை உயர்ந்த ஆபரணம் கிடைக்கும். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்களால் லாபம் பெருகும்.

**மகரம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். புது வாகனம் வாங்குவீர்கள். நெருங்கியவர்களுக்காக மற்றவர்களின் உதவியை நாடுவீர்கள்.

**கும்பம்**
புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். பிள்ளைகள் குடும்ப சூழ்நிலை அறிந்து செயல்படுவார்கள். சிக்கனமாக செலவழித்து சேமிக்கத் தொடங்குவீர்கள். வேற்று மதத்தவர் உதவுவார்.

**மீனம்**
எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒரு வேலை முடியும். தாய்வழி உறவினர்களுடன் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். நண்பர்கள் உதவுவார்கள்.

# மூன்றாண்டு ஆட்சியின் நினைவு பரிசு முத்திரைக் கட்டண உயர்வு மட்டுமே!

## தி. மு. கவை கடுமையாகச் சாடிய இ. பி. எஸ்.

சென்னை, மே 13

தனது மூன்றாண்டு செயலற்ற ஆட்சியின் நினைவுப் பரிசாக தமிழகம் முழுவதும் முத்திரைக் கட்டணத்தை பல மடங்கு உயர்த்தியுள்ளது தி. மு. க. அரசு- இவ்வாறு அ. தி. மு. க. பொதுச் செயலாளரும் முன்னாள் முதலமைச்சருமான எடப்பாடி பழனிசாமி கடுமையாகச் சாடியுள்ளார்.

இதேவேளை, தமிழகத்தில் எவ்வித நியாயமும் இன்றி பல மடங்கு முத்திரைக் கட்டணங்கள் உயர்த்தப்பட்டு வெளியிடப்பட்டுள்ள அரசாணையை உடனடியாகத் திரும்பப் பெற வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் நேற்று ஞாயிற்றுக்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையில், "தி. மு. க. அரசு பொறுப்பேற்றதில் இருந்தே தமிழக மக்களுக்குச் சோதனையான காலமாகவே இருந்து வருகிறது. விடியல் தரப்போகிறேன் என்று கூறி ஆட்சிக்கு வந்த ஸ்டாலினின் ஆட்சி ஒரு இருண்ட ஆட்சியாகவே இருக்கிறதென்று சொன்னால் அது மிகையாகாது. திரும்பிய துறைகளில் எல்லாம் நிர்வாகத் திறமையற்று மக்கள் தலையில் பேரிடியாய் வாய்த்திருக்கின்ற இந்த அரசு, தனது மூன்றாண்டு செயலற்ற ஆட்சியின் நினைவுப் பரிசாக தமிழகம் முழுவதும் முத்திரைக் கட்டணத்தை பல மடங்கு உயர்த்தியுள்ளது.

ஸ்டாலின் தலைமையிலான தி. மு. க. அரசு, அனைத்துத் துறைகளையும் முறைகேடுகளால் சீர்குலைத்து, மாநிலத்தின் நிதிநிலைமையை நிலைகுலையச் செய்து, தன் தவறுகளால் ஏற்படும் பாரத்தை, வரி மற்றும் கட்டண உயர்வுகள் மூலம் மக்கள் தலையில் பெரும் சுமையை ஏற்றுவது கடும் கண்டனத்துக்குரியது. ஏற்கெனவே, தி. மு. க. அரசு கொண்டுவந்த வழிகாட்டு மதிப்பு உயர்த்தப்பட்டது செல்லாது என்று சென்னை உயர்நீதிமன்றம் கொடுத்த தீர்ப்பை இதுவரை இந்த தி. மு. க. அரசு நடைமுறைப்படுத்தவில்லை. உச்ச நீதிமன்றமும், உயர்நீதிமன்றத் தீர்ப்புக்கு இதுவரை தடையாணை தரவில்லை.

எனவே, எவ்வித நியாயமும் இன்றி பல மடங்கு முத்திரைக் கட்டணங்கள் உயர்த்தப்பட்டு வெளியிடப்பட்டுள்ள அரசாணையை உடனடியாகத் திரும்பப் பெறுமாறும், சென்னை உயர்நீதிமன்றம் அளித்த தீர்ப்பின்படி வழிகாட்டு மதிப்பையும் முன்பிருந்த நிலைக்குத் தொடர வேண்டும் என்றும் தி. மு. க. அரசை வலியுறுத்துகிறேன்"- என்று அறிக்கையில் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ)

# வேகமாக பரவும் வெஸ்ட் நைல் காய்ச்சல் தமிழக - கேரள எல்லையில் கண்காணிப்பு



சென்னை, மே 13

கேரளாவில் வெஸ்ட் நைல் காய்ச்சல் பரவி வருவதால், அங்கிருந்து தமிழகம் வருபவர்களைக் கண்காணித்து வருவதாக தமிழக மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் தெரிவித்தார்.

சென்னையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை செய்தியாளர்களைச் சந்தித்த அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இந்தக் காய்ச்சலுக்கு காரணம் வெஸ்ட் நைல் நுளம்பு. இந்த நோய்களிலிருந்து நம்மைக் காத்துக் கொள்வதற்கு, நாம் வசிக்கும் வீடுகளை சுத்தமாக வைத்துக் கொள்வது, வீடுகளை ஒட்டி தேவையற்று தேங்கிக்கிடக்கும் நீ ரை அப்புறப்படுத்துவது ஆகியவற்றை தொடர்ச்சியாக கண்காணிக்க வேண்டும்.

கேரளாவில் இருந்து தமிழகத்துக்கு 13 வழிகளின் வழியே, இருசக்கர மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் மூலம் வருவதற்கான வழிகள் உள்ளன. அந்தப் பகுதிகளில் எல்லாம் சுகாதாரத் துறை மூலம் கண்காணிப்புப் பணி மேற் கொள்ளப்பட்டு வருகிறது.- என்று அமைச்சர் கூறினார். முன்னதாக, சர்வதேச தாதியர் கள் தினத்தையொட்டி, அமைச்சர் மா. சுப்பிரமணியனை சந்தித்து தமிழ்நாடு தாதியர் சங்கத்தினர் வாழ்த்துப் பெற்றனர். (எ)

# சவுக்கு சங்கர் மீண்டும் கோவை சிறையில் அடைப்பு



கோவை, மே 13

பொலிஸ் உயர் அதிகாரிகள், பெண் பொலிஸார் குறித்து அவதூறாக பேசிய வழக்கில் கோவை சைபர் க்ரைம் பொலிஸாரால் கடந்த 4 ஆம் திகதி சவுக்கு என்ற யூ- ரியூப் சனலின் முதன்மை செயல் அதிகாரி சங்கர் கைது செய்யப்பட்டார். தொடர்ந்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டு கோவை மத்திய சிறையில் அடைக்கப்பட்டார்.

இதன்பின்னர் சவுக்கு சங்கர் மீது கஞ்சா வைத்திருந்ததாக தேனி பழனிசெட்டிபட்டி பொலிஸார் வழக்குப் பதிவு செய்தனர். தொடர்ந்து திருச்சி, சென்னை உள்ளிட்ட பல்வேறு இடங்களில் அவர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது. கஞ்சா வழக்குத் தொடர்பாக தேனி பொலிஸார், அவதூறு வழக்குத் தொடர்பாக சென்னை, திருச்சி பொலிஸார் சவுக்கு சங்கரை அடுத்தடுத்து கைது செய்தனர்.

விசாரணைக்கு முன்னிலைப்படுத்த சவுக்கு சங்கரை, பொலிஸார் சென்னைக்கு அழைத்துச் சென்றனர். அங்கு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட பின்னர் சவுக்கு சங்கர் மீண்டும் நேற்று முன்தினம் காலை கோவைக்கு கொண்டுவரப்பட்டு மத்திய சிறையில் அடைக்கப்பட்டார்.

இதேவேளை, பெண் பொலிஸாரை சவுக்கு சங்கர் அவதூறாகப் பேசியதாக திருச்சி மாவட்ட சைபர் க்ரைம் பொலிஸில் செய்யப்பட்ட முறைப்பாட்டின் பேரில் சங்கர் மீதும் அவரது நேர்காணலை ஒளிபரப்பிய யூ- ரியூப்பர் பெலிக்ஸ் ஜெரால்ட் மீதும் வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

இந்நிலையில் டில்லியில் தனியார் விடுதியில் தங்கியிருந்த பெலிக்ஸ் ஜெரால்டை, திருச்சியிலிருந்து சென்ற தனிப்படை பொலிஸார் கைது செய்தனர். மேலும், அவரை திருச்சிக்கு கொண்டு வந்து சிறையில் அடைக்கத் திட்டமிட்டுள்ளனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோட்டாபயவின் உயிரை நானே காப்பாற்றினேன்!

## என்கிறார் மாலைதீவின் முன்னாள் ஜனாதிபதி



மாலே, மே 13

**அறகலயவின் போது முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தாக்கப்பட்டு கொலை செய்யப்படும் ஆபத்து நிலவியதால் அவர் இலங்கையிலிருந்து வெளியேற உதவினேன்.**

**- இவ்வாறு மாலைதீவின் முன்னாள் ஜனாதிபதி மொஹமட் நஷீட் தெரிவித்துள்ளார்**

ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை

வருமாறு, நீண்டகாலமாக பாதுகாக்கப்பட்ட இலங்கையின் ஜனநாயகம் குறித்த பெருமைக்கு ஆபத்தை ஏற்படுத்தும் விதத்தில் அறகலயவின்போது

ஜனாதிபதியொருவர் அடித்துக்கொல்லப்படுவதைத் தடுப்பதற்காக 2022 ஜூலை மாதம் 12 ஆம் திகதி அவர் தப்பியோடுவதற்கு உதவினேன். வேறுபல நாடுகளைப் போல இலங்கை ஒருபோதும் சதிப் புரட்சியை எதிர்கொண்டது இல்லை. உள்நாட்டு யுத்தத்தின் போது கூட இலங்கை

தேர்தல்களை தவறவிட்டது இல்லை. இலங்கை எப்போதும் தேர்தல் மூலமே அதிகார மாற்றத்தில் ஈடுபட்டுள்ளது. இலங்கையில் ஜனாதிபதியொருவர் ஒருபோதும் தாக்கப்பட்டு படுகொலை செய்யப்படவில்லை. ஒருபோதும் ஜனாதி பதியைக் கைது செய்ததும் இல்லை.

நான் எனது ஜனாதிபதி காலத்தில் எதிர்கொண்டது போன்ற நிலைமை இலங்கையில் காணப்பட்டது. கொழும்பு அதனை எதிர்கொள்வதை நான் விரும்பவில்லை.

இன்றும் அதே அரசாங்கம் பதவியில் உள்ளது. உங்கள் ஜனாதிபதி மாத்திரம்தான் வேறு ஒருவர் எனவும் குறிப்பிட்டுள்ள மொஹமட் நஷீட், 2009 ஆம் ஆண்டு யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவருவதற்கு பயன்படுத்தப்பட்ட துப்பாக்கிகளும் துப்பாக்கிக் குண்டுகளும் இன்றும் இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

நான் மாலேயில் எதிர்கொண்ட விடயங்கள் கொழும்பில் இடம்பெற்றால் தென்னாசியா முழுவதும் அது எதிரொலிக்கும். தென்னாசியா தப்பிப்பிழைக்காது என நான் கருதினேன். இலங்கை மக்கள் வேறு ஓர் அரசியல் ஏற்பாட்டை செய்து கொள்வதற்கு உதவுவதற்கான சந்தர்ப்பம் எனக்கு கிடைத்துள்ளதாக நான் கருதினேன். எனது மனதில் கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகுவது வேறு எதனையும் விட முக்கியமானதாக படவில்லை.

ஜனாதிபதி அந்த காலகட்டத்தில் பதவி விலகத் தயாராகயிருக்கவில்லை. அவர் இன்னமும் வலுவானவராக காணப்பட்டார். அவரின் கட்டுப்பாட்டின் கீழ் படையினர் காணப்பட்டனர். ஜனாதிபதியின் உயிருக்கு ஆபத்து ஏற்படும் போது இராணுவம் தலையிட முடியாது என எப்படி நான் எதிர்பார்க்காமல் இருக்க முடியும் எனவும் மொஹமட் நஷீட் கேள்வி எழுப்பியுள்ளார். (எ)



# யாழிலிருந்து திருக்கேதீஸ்வரத்துக்கு கொடிச்சீலை கொண்டுசெல்லப்பட்டது

யாழ்ப்பாணம், மே 13

வரலாற்றுச் சிறப்புமிக்க மன்னார் திருக்கேதீஸ்வரம் ஆலய வருடாந்த மகோற்சவப் பெருவிழாவுக்கான கொடிச்சீலை நேற்றுக்காலை யாழ்ப்பாணத்திலிருந்து திருக்கேதீஸ்வரம் ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

கொடிச்சீலை உபயகாரரான திருநெல்வேலி கிழக்கு கெனடி வீதிலுள்ள சண்முகநாதன் கபிலன் வீட்டிலிருந்து கொடிச்சீலை எடுத்துச் செல்லப்பட்டு திருநெல்வேலி வெள்ளைப்பிள்ளையார் ஆலயத்தில் வைக்கப்பட்டு அங்கு விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன.

அதனைத் தொடர்ந்து திருக்கேதீஸ்வரம் ஆலயத்துக்கு கொடிச்சீலை வாகனத்தில் எடுத்துச் செல்லப்பட்டது.

திருக்கேதீஸ்வரம் ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

1982 ஆம் ஆண்டுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் இருந்தே திருக்கேதீஸ்வரத்துக்கு கொடிச்சீலை வழங்கப்பட்ட நிலையில் யுத்த காலத்தில் அந்த நடைமுறை கைவிடப்பட்டிருந்தது.

இந்நிலையில் 40 வருடங்களுக்குப் பின்னர் கடந்த வருடம் முதல் மீண்டும் யாழ்ப்பாணத்திலிருந்து திருக்கேதீஸ்வரம் ஆலயத்துக்கு பாரம்பரிய முறைப்படி கொடிச்சீலை வழங்கி வைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (எ)

# போலி கடவுச்சீட்டுகள், வீசாக்களுடன் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர் கைது

கொழும்பு, மே 13

7 போலி இலங்கை கடவுச்சீட்டுகள், 5 கனேடிய வதிவிட வீசாக்களுடன் சண்டிலிப்பாயைச் சேர்ந்த 47 வயதுடைய நபர் நீர்கொழும்பில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

போலி கடவுச்சீட்டைப் பயன்படுத்தி கனடாவுக்குத் தப்பிச் செல்ல முயன்ற இரண்டு இலங்கையர்கள் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

சனிக்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றதுடன் இந்தச் சம்பவத்துக்கு உதவிய சந்தேக நபரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பைச் சேர்ந்த 47 வயதுடைய நபரும், வவுனியாவைச் சேர்ந்த 37 வயதுடைய நபரும் டுபாய் ஊடாக கனடா செல்வதற்காக கட்டுநாயக்கா விமான நிலையத்துக்கு வந்துள்ளனர்.

இவர்கள் இருவரும் போலி கடவுச்சீட்டுகளைப் பயன்படுத்தியதால், அவர்களைக் கைதுசெய்ய கட்டுநாயக்கா விமான நிலைய குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதனையடுத்து, அவர்களிடம் நடத்திய விசாரணையில் இந்த கடவுச்சீட்டைத் தயாரித்த நபர் நீர்கொழும்பிலுள்ள சுற்றுலா விடுதியில் தங்கியிருப்பது தெரியவந்துள்ளது.

குற்றப்புலனாய்வுத்துறை அதிகாரிகள் அந்த விடுதியைச் சோதனை செய்து குறித்த நபரைக் கைது செய்துள்ளனர்.

குறித்த நபர் யாழ்ப்பாணம் சண்டிலிப்பாயைச் சேர்ந்த 47 வயதுடையவர் என்பதுடன் இவரிடமிருந்து 7 போலி இலங்கை கடவுச்சீட்டுகள், 5 கனேடிய வதிவிட வீசாக்கள் என்பன குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதன் பின்னர், கைது செய்யப்பட்ட மூவரும் போலி கடவுச்சீட்டுக்கள், வசிப்பிட அட்டைகள், வதிவிட வீசாக்கள் மற்றும் விமான நுழைவு அனுமதிப்பத்திரங்கள் ஆகியவற்றுடன் நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர். (எ)

# சுடுநீர் கொதிகலன் விழுந்து 24 வயது இளைஞன் மரணம்

## மலேசியாவிலிருந்து மஸ்கெலியா வந்தது சடலம்

மஸ்கெலியா, மே 13

மலேசியாவிலுள்ள உணவகம் ஒன்றில் சுடுநீர் கொதிகலன் விழுந்து உயிரிழந்த இளைஞனின் சடலம் அவரது வீட்டுக்கு கொண்டு வரப்பட்டதாக மஸ்கெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

மஸ்கெலியாவைச் சேர்ந்த 24 வயது இளைஞனே இவ்வாறு உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த இளைஞன் கடந்த ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் மலேசியாவுக்கு வேலைக்குச் சென்றுள்ளார்.

அங்கு இந்த இளைஞன் வேலை செய்து கொண்டிருந்த போது சுடுநீர் கொதிகலன் தவறுதலாக உடல் மீது விழுந்து நீர் ஊற்றப்பட்டதில் பலத்த தீக்காயம் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் மலேசியாவிலுள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி குறித்த இளைஞன் உயிரிழந்தார். (எ)

# ஜனாதிபதி தேர்தலில் ரணில் நிச்சயம் வெற்றிபெற வேண்டும்

## பிள்ளையான் தீவிர ஆலோசனை

மட்டக்களப்பு, மே 13

இந்த நாட்டில் எதிர்பார்ப்பு இல்லாத உறுதியான திட்டத்தோடு இருக்கின்ற தலைவர்களை தற்போது காணமுடியாது இருக்கின்றது. எனவே ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க போட்டியிட்டால் நிச்சயம் அவரை வெற்றிபெற வைப்பதற்குத் தீவிர ஆலோசனைகளைச் செய்து கொண்டிருக்கின்றோம் என இராஜாங்க அமைச்சரும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவருமான பிள்ளையான் என்ற அழைக்கப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மாவட்டத்தில் இடம்பெற்றுவரும் கால நிலைக்குச் சீரமைவான நீர்ப்பாசனத் திட்டம் தொடர்பான முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் மற்றும் ஜனாதிபதியின் உறுமய தொடர்பான திட்டம் தொடர்பான கூட்டத்தில் பங்கேற்ற பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

மாவட்டத்தில் உறுமய திட்டத்தின் ஊடாக காணி பகிர்ந்தளிப்பு தொடர்பில் அரசாங்க அதிகாரிகள் எதிர்கொண்டுள்ள சவால்கள் குறித்து கலந்துரையாடினோம். நாட்டில் 20 இலட்சம் காணித் துண்டுகளை விரைவாக வழங்க வேண்டும் என்ற வேலைத்திட்டத்தை ஜனாதிபதி ஆரம்பித்துள்ளார்.

அதற்கு உதவி செய்யும் முகமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் 27 ஆயிரம் ஏக்கர் காணியைப் பகிர்ந்தளிக்க வேண்டியிருக்கின்றது. அதனை விரைவுபடுத்துவதற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளோம். அந்தவகையில் 514 பேருக்கான காணி பகிர்ந்தளிப்பு இடம்பெற்றுள்ளது.

எனவே, இதில் உள்ள குறைபாடுகளை விரைவாக நிவர்த்திசெய்து கொண்டு அனைவருக்கும் உறுமய வேலைத்திட்டதின் ஊடாக விரைவாக காணி கையளிப்பு இடம்பெற ஏற்பாடு செய்துள்ளோம்.

ஜனாதிபதித் தேர்தல் 10 மாதத்தில் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே பாராளுமன்றத் தேர்தல் முதலில் நடந்தால் நல்லது என்பது எனது தனிப்பட்ட கருத்து.

இருந்த போதும் ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொண்டாக வேண்டும். நாடு ஒரு சிக்கலான சூழலில் இருந்தது. அதிலிருந்து மீட்டு நம்பிக்கையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஏற்படுத்தியுள்ளார்.

நாங்கள் ஒரு தொங்கு பாலத்தால் நடந்து செல்வதாகவும் இந்த பாலத்தை கடந்துதான் ஆகவேண்டும் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார். எனவே அந்த பாலத்தை கடந்து உறுதியான ஒரு பொருளாதாரக் கட்டமைப்பு உருவாக வேண்டுமாக இருந்தால் அவர் இந்த நாட்டுக்குத் தொடர்ந்து சேவையாற்ற வேண்டும்.

அடுத்த தலைவராக உறுதியான திட்டத்தோடு இருக்கின்ற தலைவர்களை காண முடியாது இருக்கின்றது. அந்த அடிப்படையில் ரணில் விக்கிரமசிங்க மீண்டும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டால் அவரை வெல்ல வைப்பதற்கான ஆலோசனைகளைச் செய்து கொண்டிருக்கின்றோம் - என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராளுமன்றத்தை கலைப்பதா? கடன் மறுசீரமைப்பை செய்வதா?

## ஜனாதிபதியே தீர்மானிக்க வேண்டும் என்கிறார் சம்பிக்க

மஹரகம, மே 13

**ராஜபக்ஷக்களுக்காக பாராளுமன்றத்தை கலைப்பதா? அல்லது நாட்டுக்காக கடன் மறுசீரமைப்பை நிறைவு செய்து பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதா? என்பதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானிக்க வேண்டும் - இவ்வாறு பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.**

நாட்டில் மீண்டும் ஒரு அரசியல் நெருக்கடியை ஜனாதிபதி தோற்றுவிக்கமாட்டார் என்ற நம்பிக்கையுள்ளது எனவும் சம்பிக்க கூறினார்.

மஹரகமவில் சனிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கை வருமாறு,

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும், பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பஸில் ராஜபக்ஷவுக்கும் இடையில் தொடர்ச்சியாக இடம்பெற்ற பேச்சுக்கள் இணக்கப்பாடற்ற வகையில் நிறைவடைந்துள்ளன. ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் பாராளுமன்றத் தேர்தலை நடத்துமாறு பஸில் ராஜபக்ஷ ஜனாதிபதியிடம் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்.

ஜனாதிபதித் தேர்தலில் களமிறக்குவதற்கு தம்மிடம் வேட்பாளர் இல்லை என்பதையும், அவ்வாறு களமிறக்கினால் படுதோல்வியடைய நேரிடும் என்பதை ராஜபக்ஷக்கள் நன்கு அறிவார்கள். அதனால் தான் இவர்கள் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் பாராளுமன்றத் தேர்தலைக் கோருகிறார்கள்.

பாராளுமன்றத்தின் தற்போதைய பலத்தை கொண்டு பாராளுமன்றத் தேர்தலில் பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தை அமைக்க ராஜபக்ஷக்கள் முயற்சிக்கிறார்கள். ராஜபக்ஷக் களுக்காக பாராளுமன்றத்தை கலைப்பதா? அல்லது கடன் மறுசீரமைப்பை நிறைவு செய்து பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதா? என்பதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானிக்க வேண்டும்.

பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண்பது தனது பிரதான இலக்கு என்று ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு வாக்குறுதி வழங்கியுள்ளார். வெளிநாட்டு அரச முறை கடன் மறுசீரமைப்பு எதிர்வரும் ஜூலை மாதம் நிறைவு பெறும் என்று அரசாங்கம் குறிப்பிடுகிறது. இவ்வாறான நிலையில் பாராளுமன்றத்தை கலைத்தால் நாட்டில் ஸ்திரமற்ற அரசியல் நிலைமை தோற்றம் பெறும். அது கடன் மறுசீரமைப்புக்கு தாக்கம் செலுத்தும் என்பதை ஜனாதிபதி நன்கறிவார்.

அரசமைப்பின் பிரகாரம், ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் செப்ரெம்பர் அல்லது ஒக்டோபர் மாதமளவில் இடம்பெறவுள்ள நிலையில் அதற்கு முன்னர் பாராளு மன்றத்தை கலைத்து பொதுத் தேர்தலை



நடத்தினால் முரண் பாடான அரசாங்கமே தோற் றம் பெறும். ஜனாதிபதி ஒரு கட்சியையும், அரசாங்கம் பிறிதொரு கட்சியையும் பிரதிநிதித்துவப்படுத்தும் போது அரசியல் நெருக்கடிகள் தோற்றம் பெறும். ஆகவே நாட்டில் மீண்டும் அரசியல் நெருக்கடி தோற்றம் பெறுவதற்கு ஜனாதிபதி இடமளிக்கமாட்டார் என்ற நம்பிக்கை உள்ளது- என்றார். (எ)



## தொல்பொருட்களுடன் கடற்படையினரிடம் சிக்கிய இளைஞன்!

கற்பிட்டி, மே 13

கற்பிட்டி, ஆலங்குடா பகுதியில் தங்கம் என சந்தேகிக் கப்படும் தொல்பொருட்களு டன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக கடற் படையினர் தெரிவித்தனர்.

இந்த தொல்பொருட்களை வீடொன்றில் மறைத்து வைத்திருந்த போதே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் கற்பிட்டி பகுதியைச் சேர்ந்த 34 வயதுடையவர் என கடற்படையினர் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை கடற்படையினர் மேற் கொண்டு வருகின்றனர். (எ)

## ஓ. எல். விஞ்ஞான பாடத்துக்குரிய வினாத்தாள் ஒதுக்கீட்டுத் திட்டத்துக்குப் புறம்பாக தயாரிப்பு

கொழும்பு, மே 13

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்கு அமைவாக அண்மையில் நடைபெற்ற விஞ்ஞான பாடத்துக்குரிய வினாத்தாள், ஒதுக்கீட்டுத் திட்டத்துக்குப் புறம்பாக தயாரிக்கப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் மதுர விதானகே குற்றஞ்சாட்டியுள்ளார்.

கொழும்பில் நடந்த ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

விஞ்ஞான பாடம் தொடர்பான வினாத்தாளில் மூன்று பல்தேர்வு வினாக்கள் மற்றும் மூன்று கட்டுரை வினாக்கள் தொடர்பாக ஒதுக்கீட்டுத் திட்டத்துக்குப் புறம்பாக வினாத்தாள் தயாரிக்கப்பட்டுள்ளது

இது தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திடம் வினவியதாகவும் மதுர விதானகே தெரிவித்தார்.

இதன்போது, பரீட்சை முடிந்து ஒரு மாதத்துக்குப் பின்னர் நடத்தப்படும் புள்ளிகள் வழங்கல் முன்னேற்றம் தொடர்பான மீளாய்வின் போது, இது தொடர்பில் கலந்துரையாடி, மாணவர்களுக்கு அநீதி ஏற்படாத வகையில் புள்ளிகளை வழங்குவதற்கான வேலைத்திட்டத்தை தயாரிப்பதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்ததாக மதுர விதானகே கூறினார். (எ)

## விளைவேலி மருதடி விநாயகர் திருவிழா நாளை ஆரம்பம்

சாவகச்சேரி, மே 13

சாவகச்சேரி நுணாவில் மேற்கு விளைவேலி மருதடி அருள்மிகு வீரகத்தி விநாயகர் தேவஸ்தான வருடாந்த திருவிழா நாளை செவ்வாய்க்கிழமை காலை 10. 30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 11 தினங்கள் இடம்பெறவுள்ளன.

இன்று திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு சாந்தி வழிபாடு இடம்பெறவுள்ளதுடன் நாளை செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணிக்கு கொடியேற்றம் இடம்பெற்று 20 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு வேட்டைத் திருவிழாவும் 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரவு 7 மணிக்கு சப்பரதத்திருவிழாவும் 22 ஆம் திகதி புதன்கிழமை காலை 9.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் 23 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.30 மணிக்குத் தீர்த்தத்திருவிழாவும் இரவு 7 மணிக்கு கொடியிறக்கமும் இடம்பெற்று 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு பூங்காவனத் திருவிழாவும் 25 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5 மணிக்கு வைரவர் பொங்கலும் இடம் பெறவுள்ளன. (எ)

## தோட்ட நிர்வாகத்தை கண்டித்து தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம்

லிந்துலை, மே 13

நுவரெலியா லிந்துலை என்போல்ட் தோட்ட நிர்வாகத்தின் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரி வித்து அந்த தோட்டத்தைச் சேர்ந்த 850 இற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் என்போல்ட் தோட்ட காரியாலயத்துக்கு முன்பாக நேற்று ஞாயிற்றுக்கிழமை கவனவீர்ப்புப் போராட் டத்தில் ஈடுபட்டனர்.



தோட்ட நிர்வாகம் தொழிலாளர்களுக்கு முறையாக வழங்க வேண்டிய சலுகைகளை வழங்கவில்லை எனவும் தொழிலாளர்களுக்கு தேயிலைத் தூள் மாதாந்தம் வழங்க முடியாது என தோட்ட அதிகாரி தெரிவித்ததாகவும் தேயிலை செடிகளை முறையாகப் பராமரிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தோட்ட அதிகாரி, தோட்டத் தலைவர்கள் மற்றும் தொழிலாளர்களை தரக்குறைவாக பேசுவதாகவும் அடிப்படை வசதிகளைக் கூட அதிகாரிகள் செய்து கொடுக்கவில்லை எனவும் தெரிவித்தே தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அதிகமான தொழிலாளர்கள் தோட்ட காரியாலயத்துக்கு முன்பதாக ஒன்றுகூடி தோட்ட அதிகாரிகளுடன் பேச்சுக்களை நடத்தியபோது, அது வாய்த்தர்க்கமாக மாறியதால் எவ்வித முடிவும் எட்டப்படவில்லை. இந்நிலையில், அவ்விடத்துக்கு வந்த இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினருமான ஏ. பி. சக்திவேல், தொழிலாளர் தேசிய சங்கத்தின் உப தலைவர் எஸ். சிவாநந்தன் உள்ளிட்டோர் தோட்ட நிர்வாக அதிகாரிகளுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

தோட்டத் தொழிலாளர்கள் நிர்வாகத்திடம் முன்வைத்த கோரிக்கைகளை தம்மால் செய்து கொடுக்க முடியாது என தோட்ட நிர்வாகம் அறிவித்ததால், பேச்சுக்கள் இழுபறியாகின.

இதன் பின்பு தொழிற்சங்கப் பிரதிநிதிகள் இப்பிரச்சினைகள் தொடர்பாக பெருந்தோட்டக் கம்பனிகளின் உயர் அதிகாரிகளுக்கு அறிவித்து, அவர்களோடு கலந்துரையாடி, இதற்குத் தீர்வு பெற்றுத்தர முடியும் என தொழிலாளர்கள் மத்தியில் தெரிவித்ததையடுத்து, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தொழிலாளர்கள் கலைந்து சென்றனர்.

இருப்பினும் தோட்ட அதிகாரி மற்றும் வெளிக்கள உத்தியோகத்தர்கள் இத்தோட்டத்தில் இருந்து வெளியேறும் வரை தாம் தொழிலுக்குச் செல்லப் போவதில்லையென தோட்ட அதிகாரிகளுக்கு தொழிலாளர்கள் எச்சரித்தமை குறிப்பிடத்தக்கது. (எ)

## பொலிஸாரின் உத்தரவை மீறிய லொறிமீது துப்பாக்கி பிரயோகம்

### இருவர் தப்பியோட்டம்

கொழும்பு, மே 13

பொலிஸாரின் உத்தரவை மீறிப் பயணித்த லொறிமீது கொழும்பு பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதுடன் லொறியில் பயணித்த இருவர் தப்பிச் சென்றுள்ளனர்.

இவ்வாறு தப்பிச் சென்ற இருவரும் சட்டவிரோதமான முறையில் மாடுகளை ஏற்றிக் கொண்டு லொறியொன்றில் பயணித்துள்ளனர்.

லொறியை போக்குவரத்து பொலிஸார் நிறுத்துமாறு உத்தரவிட்டுள்ளனர். சாரதி லொறியை நிறுத்தாது பொலிஸாரின் உத்தரவை மீறி அதிவேக வீதியில் மிக வேகமாகப் பயணித்துள்ளார்.

பொலிஸார் லொறியைப் பின் தொடர்ந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட போது லொறியை வீதியில் கைவிட்டு இருவரும் தப்பிச் சென்றுள்ளனர்.

கைவிடப்பட்ட லொறியை பொலிஸார் சோதனை செய்த போது மாடுகள் மற்றும் சாரதி இருக்கைக்கு அடியிலிருந்த கைக்குண்டு, கைத்தொலைபேசி என்பன கைப்பற்றப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச சொத்துகள் விற்பனையை உடனடியாக நிறுத்த வேண்டும்!

## மகிந்த விசேட அறிவிப்பு



கொழும்பு, மே. 13

**எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் புதிய அரசாங்கம் அமைக்கப்படும் வரை அரசாங்கத்திற்குச் சொந்தமான சொத்துக்கள் அல்லது வர்த்தகங்களை விற்பனை செய்வதற்கு மேற்கொள்ளப்படும் அனைத்து நடவடிக்கைகளையும் இடைநிறுத்த வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

விசேட அறிவிப்பொன்றை விடுத்து அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்திற்கு சொந்தமான சில சொத்துக்கள் மற்றும் வர்த்தகங்களை விற்பனை செய்யும் நடவடிக்கைகளால், தொழிற்சங்கங்கள், அரசியல் கட்சிகள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் அமைதியின்மை ஏற்பட்டுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த சுட்டிக்காட்டியுள்ளார்.

நஷ்டத்தில் இயங்கும் அரசு நிறுவனங்களுக்கான செலவினங்களைக் குறைத்து, அது தொடர்பாக சர்வதேச நாணய நிதியம் விதித்துள்ள நிபந்தனைகளை நிறைவேற்றும் வகையிலேயே தற்போதைய அரசின் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

தற்போதைய அரசாங்கம் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் எஞ்சிய காலப் பகுதியில் நாட்டை ஆளுவதற்காக ஏற்படுத்தப்பட்ட இடைக் கால ஏற்பாடாகும்.

இவ்வாறான நிலையில் அவசர அவசரமாக அரச சொத்துக்களை விற்பதன் மூலம் நாட்டுக்கு ஆக்கப்பூர்வமான பலனைப் பெற்றுக்கொடுக்க முடியாது - என்றார். (அ)

# வெளிநாட்டுக்கு அனுப்புவதாக கூறி இலட்சக்கணக்கான ரூபா மோசடி!

## மொட்டு கட்சி உறுப்பினர் யாழில் கைது

யாழ்ப்பாணம், மே. 13

வெளிநாட்டுக்கு அனுப்புவதாக கூறி மோசடியில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் பொது ஜன பெரமுனவின் அமைப்பாளரொருவர் யாழ்ப்பாணத்தில் கைதுசெய்யப்பட்டார்.

யாழ்ப்பாண பிராந்திய குற்றத்தடுப்பு பொலிஸார் கைது நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

ஒன்பது இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் மோசடியில் ஈடுபட்டதாக தெரிவித்து பொது ஜன பெரமுனவின் தீவக அமைப்பாளர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டவரிடம் யாழ்ப்பாணம் பிராந்திய குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# 5 மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை

கொழும்பு, மே. 13

நாட்டின் பல பகுதிகளுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.


கடந்த 24 மணித்தியாலத்தில் 75 மில்லிமீற்றருக்கும் அதிக மழை வீழ்ச்சி பதிவாகியதை அடுத்தே, இந்த மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவிக்கின்றது.

இதன்படி, பதுளை, கண்டி, கேகாலை, குருநாகல் மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களுக்கு முதல் நிலை மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (அ)

# எட்டு வருடங்களின் பின் வரலாறு காணாத வெப்பம்

கொழும்பு, மே. 13

எட்டு வருடங்களின் பின்னர் இந்த ஆண்டு இலங்கையின் வெப்பநிலை வரலாறு காணாத அளவில் அதிகரித்துள்ளதாக பேராதனைப் பல்கலைக்கழகத்தின் புவியியல் துறைத் தலைவர் பேராசிரியர் திலக் விஜய துங்க பண்டார தெரிவித்துள்ளார்.



வடக்கு, வடமத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களில் கடந்த வாரம் சராசரியாக 39 பாகை செல்சியஸாக வெப்பநிலை அதிகரித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இறுதியாக கடந்த 2016ஆம் ஆண்டு இலங்கையில் அதிக வெப்பநிலை பதிவானது. இலங்கையின் சராசரி வெப்பநிலை 27 முதல் 29 டிகிரி செல்சியஸ் வரை இருக்கும் என்றும் பேராசிரியர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் கடந்த சில நாட்களாக வெயிலின் தாக்கம் அதிகரித்து வருவதால் பொது மக்கள் அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

எனவே பொதுமக்கள் சுகாதார மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளை பின்பற்ற வேண்டும் என பேராசிரியர் திலக் விஜயதுங்க பண்டார அறிவுறுத்தியுள்ளார். (அ)

# உலக தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலை நினைவுத்தூபியில் முள்ளிவாய்க்கால் நினைவு!

யாழ்ப்பாணம், மே. 13

இலங்கை தமிழரசு கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரவாதம் சரவணபவனின் ஏற்பாட்டில் வட்டுக்கோட்டை தொகுதி கிளையினால் முள்ளிவாய்க்கால் கஞ்சி விநியோகமும் முள்ளிவாய்க்கால் நினைவு ஊர்தி பவனியும் நேற்று காலை உலக தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலை நினைவுத்தூபியில் காரைநகர் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் கணேசபிள்ளை பாலசந்திரன் தலைமையில் முன்னெடுக்கப்பட்டது.



இதன்பொழுது முள்ளிவாய்க்கால் மண்ணில் உயிர் நீத்தவர்களை நினைவுகூறி முன்னாள் பேராளியும் முன்னாள் உபதவிசாளருமான விஜயனால் பொதுச்சுடர் ஏற்றி வைக்கப்பட்டு தொடர்ச்சியாக ஈகைச் சுடரேற்றி அகவணக்கம் செலுத்தி மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது.

இதேவேளை முள்ளிவாய்க்கால் நினைவு கஞ்சியும் விநியோகிக்கப்பட்டது.

இதனை தொடர்ந்து தமிழின படுகொலை அடையாளப்படுத்தும் முள்ளிவாய்க்கால் நினைவு ஊர்தி யாழ் நகரிலிருந்து ஆரம்பமானது.

இதன்பொழுது முள்ளிவாய்க்கால் கஞ்சியின் வரலாற்றினை உள்ளடக்கிய துண்டுபிரசுரமும் வழங்கி வைக்கப்பட்டது. (அ)

# முள்ளிவாய்க்கால் வாரத்தில் கம்பர்மலை அம்மன் கோவிலில் சிறப்பு பூசை வழிபாடு

வடமராட்சி, மே 13

15 வது முள்ளிவாய்க்கால் தமிழ் இனப்படுகொலை வாரத்தின் முதல் நாளான இன்று ஞாயிற்றுக்கிழமைஇலங்கை தமிழரசுக் கட்சியின் பருத்தித்துறை தொகுதியினரால் வல்வெட்டு வன்னிச்சி அம்மன் ஆலயத்தில் சிறப்பு ஆத்ம சாந்தி பிரார்தனைகள் நடத்தப்பட்டுள்ளன.

இலங்கை தமிழரசுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், மற்றும் முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் சந்திரலிங்கம் சுகிர்தன் ஆகியோர் உட்பட இலங்கை தமிழரசுக் கட்சியின் வாலிபர் முன்னணி உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டு சிறப்பு பூசை வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

அத்துடன் கம்பர்மலை சந்தியில் பாரதி இளைஞர்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கஞ்சி வழங்கும் நிகழ்விலும் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மற்றும் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் சந்திரலிங்கம் சுகிர்தன் ஆகியோர் கலந்துகொண்டனர். (அ-2)

# திடீரென நாட்டைவிட்டு தப்பியோடும் போதைப்பொருள் கடத்தல்காரர்கள்!

நூற்றுக்கும் அதிகமான பிரதான போதைப்பொருள் கடத்தல்காரர்கள் வியாபாரங்களிலிருந்து நீங்கி நாட்டை விட்டு தப்பியோடியுள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

பல வருடங்களாக போதைப்பொருள் கடத்தலில் மற்றும் விற்பனையில் ஈடுபட்டு வந்த இவர்கள் விசேட அதிரடிப்படையினர் மீது பெரும் அச்சத்தில் இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

விசேட அதிரடிப்படை மற்றும் காவல்துறை புலனாய்வுப் பிரிவு அவர்களை கைது செய்ய முயற்சிக்கும் சந்தர்ப்பத்தில் அவர்கள் நாட்டிலிருந்து தப்பியோடியுள்ளமை தெரியவந்துள்ளது.

மேல் மாகாணம் மற்றும் தென் மாகாணத்தை இலக்காகக் கொண்டு பல வருடங்களாக இவர்கள் போதைப்பொருள் வியாபாரங்களில் ஈடுபட்டு வந்துள்ளனர். இவர்களுள் அநேகமானோர் வெளிநாடுகளில் இருப்பதாக தெரிய வந்துள்ளது.

அண்மைய தினங்களாக தொடர்ந்து நடைபெற்று வரும் சுற்றிவளைப்புகள் காரணமாக இவர்கள் போதைப்பொருள் கடத்தல் மற்றும் வியாபாரத்தை விட்டு விலகியுள்ளதாக தெரியவந்துள்ளது. (அ)

# இலங்கையில் குடும்பம் ஒன்றின் மாதச்செலவு வெகுவாக உயர்வு!

கொழும்பு, மே. 13

இலங்கையில் குடும்பம் ஒன்றின் மாதச்செலவு ஒரு இலட்சம் ரூபாவினை கடந்துள்ளதாக மத்திய வங்கியின் ஆண்டறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பணவீக்கம காரணமாக இவ்வாறு மாதச் செலவு வெகுவாக அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது 2023 ஆம் ஆண்டில் குடும்பம் ஒன்றின் மாதச்செலவு 16.5 வீதத்தினால் உயர்வடைந்துள்ளது.

கடந்த 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் உணவு அல்லாத பொருட்களுக்கு கூடுதல் அளவில் மக்கள் செலவிட்டுள்ளனர்.

2023 ஆம் ஆண்டில் குடும்பம் ஒன்றின் உணவு அல்லாத செலவுகள் 56.2 வீதமாக காணப்பட்டுள்ளது.

உணவு அல்லாத பொருட்களின் விலை உயர்வு காரணமாக இவ்வாறு செலவுகளும் உயர்வடைந்துள்ளன. (அ)

# சுதந்திர கட்சியின் புதிய பதில் பொதுச் செயலாளர் நியமனம்

கொழும்பு, மே 13

சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் பதில் பொதுச் செயலாளராக சட்டத்தரணி கீர்த்தி உடவத்த நியமிக்கப்பட்டுள்ளார்.

சுதந்திரக் கட்சியின் மைத்திரிபால சிறிசேன தரப்பின் செயற்குழு கூட்டம் நேற்றுக் காலை கொழும்பிலுள்ள தனியார் விடுதியில் இடம்பெற்றது.

இதன்போதே பதில் பொதுச் செயலாளராக சட்டத்தரணி கீர்த்தி உடவத்த நியமிக்கப்பட்டுள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெப்பநிலை அதிகரிப்பு


# கிழக்கில் உள்ளூர் சேவையில் குளிரூட்டப்பட்ட பேருந்துகள்



திருகோணமலை, மே 13

வெப்பநிலை சடுதியாக அதிகரித்துள்ளதைக் கருத்தில் கொண்டு முதன் முறையாக கிழக்கு மாகாணத்தில் உள்ளூர் போக்குவரத்துக்காக குளிரூட்டப்பட்ட பேருந்துகளை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

பொதுமக்களின் வசதியான பயணத்துக்கான உள்ளூர் சேவைக்காக குளிரூட்டப்பட்ட பேருந்துகளுக்கு போக்குவரத்து அனுமதிப்பத்திரங்களும் ஆளுநரால் வழங்கி வைக்கப்பட்டன. (எ)



# போதை மாத்திரைகளை கடத்தியவர் கைதானார்

ஓட்டமாவடி, மே 13

மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் காரிலிருந்து ஒரு தொகை போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் அதனைக் கொண்டுசென்ற ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடற்படை புலனாய்வுப்பிரிவினர் வழங்கிய தகவலின் அடிப்படையில் கல்லடி விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி ரத்நாயக்க தலைமையிலான விசேட அதிரடிப்படையினர் மட்டக்களப்பு புகையிரத வீதியில் வைத்து கார் ஒன்றை சோதனையிட்டபோது இந்த போதைமாத்திரைகள் மீட்கப்பட்டன.

ஓட்டமாவடியிலிருந்து மட்டக்களப்புக்கு விற்பனைக்காக கொண்டுவரப்பட்ட 48 பெட்டிகள் கொண்ட 1, 440 போதை மாத்திரைகள் மீட்கப்பட்டதாக விசேட அதிரடிப்படையினர் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்டவர் தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டதுடன் மேலதிக விசாரணைகளுக்காக கைது செய்யப்பட்ட நபர், கார், போதை மாத்திரைகள் மட்டக்களப்பு பொலிஸ் தலைமையகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் முன்னெடுத்து வருவதுடன் கைதுசெய்யப்பட்டவரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (எ)

# கிழக்கில் பாடசாலை மாணவர்களுக்கு வீதிப்போக்குவரத்து பாதுகாப்பு சீருடை

திருகோணமலை, மே 13


கிழக்கு மாகாண பாடசாலை மாணவர்களுக்கு வீதிப் போக்குவரத்து பாதுகாப்புச் சீருடைகளை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் வழங்கி வைத்தார்.

பாடசாலை ஆரம்பிக்கும் நேரத்திலும் முடிவடையும் நேரத்திலும் வீதிப் போக்குவரத்து பொலிஸாருடன் இணைந்து வீதியைக் கடக்கும் மாணவர்களுக்கு பாதுகாப்பு வழங்கும் மாணவர்களுக்கே இச் சீருடைகள் வழங்கப்பட்டன.

இதேவேளை, இன்னும் ஒரு மாத காலத்துக்குள் கிழக்கு மாகாணத்திலுள்ள சகல பாடசாலைகளுக்கும்



முன்னால் வீதித் தடைகளை ஏற்படுத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகளினூடாக நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் ஆளுநர் உறுதியளித்தார். (எ)



# கசிப்பு காய்ச்சிய மூவர் கதிரவெளியில் கைது

வாகரை, மே 13

வாகரை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கதிரவெளி பகுதியில் சட்டவிரோதமாக கசிப்பு காய்ச்சிய மூவர் நேற்று சனிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

வெலிகந்தை இராணுவப் புலனாய்வுப் பிரிவினர், தமக்குக் கிடைத்த இரகசிய தகவலுக்கமைய கதிரவெளி விசேட அதிரடிப்படையினருடன் இணைந்து சுற்றிவளைப்பில் ஈடுபட்டபோதே சந்தேகநபர்கள் மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து 300 லீற்றர் கசிப்பு, கசிப்பு தயாரிக்க பயன்படுத்தப்பட்ட ஒன்பது பீப்பாய்கள், செப்புக் கம்பிகள் போன்றவை கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த மூவரையும் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர். (எ)

# மக்கள் ஆவணங்களை வழங்கி உறுமயவுக்கு உதவ கோரிக்கை

மட்டக்களப்பு, மே 13

ஜனாதிபதியால் முன்னெடுக்கப்படும் உறுமய 20 இலட்சம் காணி உறுதிப் பத்திரங்களை வழங்கும் பணிகளுக்கு அமைவாக முன்னெடுக்கப்படும் செயல்பாடுகளுக்கு பொதுமக்கள் தமது ஆவணங்களை வழங்கி உறுதிகளைப் பெற்றுக்கொள்ளுமாறு மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜே. ஜே. முரளிதரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஜனாதிபதியால் முன்னெடுக்கப்படும் உறுமய திட்டத்தை விரைவில் நடைமுறைப்படுத்துவது குறித்து ஆராயும் விசேட கூட்டம் நேற்று முன்தினம் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. இதில் உரையாற்றியபோதே அரசாங்க அதிபர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.



இதேவேளை, உறுமய திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கு அதிகாரிகள் மட்டத்தில் எதிர்கொள்ளும் பிரச்னைகள் குறித்து ஆராயப்பட்டதுடன் அவற்றைத் தீர்த்து வைப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், வழிமுறைகள் குறித்தும் ஆராயப்பட்டன.

இந்தத் திட்டத்தை விரைவில் நிறைவுசெய்து மக்களுக்கான காணி உறுதிகளை வழங்க நடவடிக்கைகள் எடுக்குமாறும் இங்கு அதிகாரிகளுக்குப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன. (எ)

# இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணியின் ஸ்தாபகர் தினம்

ஒலுவில், மே 13

அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணியின் ஸ்தாபகர் தினம் முன்னணியின் அம்பாறை மாவட்ட சம்மேளனத்தின் ஏற்பாட்டில் ஒலுவில் கிறீன்வாசல் ஹோட்டலில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது

மாவட்ட நிறைவேற்றுப் பணிப்பாளரும், முன்னாள் தேசிய தலைவருமான எம். ஐ. உதுமாலெவ்வை தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அமைப்பின் மாவட்ட ஆலோசகர்கள், முன்னாள் தலைவர்கள், உறுப்பினர்கள், கல்வியலாளர்கள், ஊடகவியலாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது, அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணியுடன் இணைந்து கடந்த காலங்களில் பல் வேறு பணிகளாற்றிய [illegible] கௌரவிக்கப்பட்டனர். (எ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காஸாவில் இடிபாடுகளுக்கு இடையில் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட உடல்கள்

காஸா, மே 13

காஸாவில் இஸ்ரேலின் தாக்குதல்களால் தகர்க்கப்பட்ட கட்டடங்களின் இடிபாடுகளுக்குள் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட உடல்கள் உள்ளன என காஸாவின் சிவில் பாதுகாப்புப் பிரிவினர் அதிர்ச்சித் தகவலை வெளியிட்டுள்ளனர்.

கடந்த பல மாதங்களாக நாங்கள் மிகச்சாதாரணமான இயந்திரங்களைப் பயன்படுத்தி இடிபாடுகளை அகற்றுவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளோம். இதனால் எங்கள் முயற்சியும் நேரமும் வீணாகியுள்ளது என ஹமாஸின் சிவில் பாதுகாப்புப் பிரிவின் பேச்சாளர் மஹ்மூத் பசால் தெரிவித்தார்.

இஸ்ரேல் ஒரு குறிப்பிட்ட பகுதியில் தாக்குதலை மேற்கொண்டதும் மருத்துவப்பிரிவினரும் காஸாவின் சிவில் பாதுகாப்புப் பிரிவினருமே முதலில் அங்கு செல்கின்றனர்.

அவர்கள் இடிபாடுகளுக்குள் சிக்கிக்கொண்டுள்ளவர்கள் - உடல்களை மீட்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடுவார்கள்.



இடிபாடுகளுக்குள் சிக்கியவர்களை மீட்பதற்கு அவசியமான இயந்திரங்களை காஸாவுக்குள் கொண்டுவருவதற்கான முயற்சிகளுக்கு ஐ. நாவும் மனிதாபிமான அமைப்புக்களும் ஆதரவளிக்க வேண்டும் என என ஹமாஸின் சிவில் பாதுகாப்புப் பிரிவின் பேச்சாளர் மஹ்மூத் பசால் கோரிக்கை விடுத்துள்ளார்.

அல்சிபா மருத்துவமனையிலிருந்து இஸ்ரேல் படையினர் விலகி 40 நாட்கள் ஆகிவிட்ட நிலையில் இன்னமும் மருத்துவமனைக்குள் பாரிய மனிதப் புதைகுழிகளுக்குள் இஸ்ரேல் படையினர் புதைத்த உடல்களை மீட்டு வருகின்றோம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ)

# பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் போராட்டம்

முசாபர்பாத், மே 13

பொருட்களின் விலை உயர்வைக் கண்டித்தும் மின்சாரத் துறைக்கு வரி விலக்கு மற்றும் கோதுமை மாவுக்கு மானியம் கோரியும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதியில் மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.


பாகிஸ்தான் கடும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. அத்தியாவசியப் பொருட்களின் விலைவாசி உச்சம் தொட்டுள்ளதால் மக்கள் கடும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளனர்.

இந்தப் போராட்டத்தில் பெருமளவு மக்கள் கலந்து கொண்டனர். போராட்டக்காரர்களைக் கலைக்கும் முயற்சியில் பாதுகாப்புப் படையினர் களமிறங்கினர். இந்நிலையில், பாதுகாப்புப் படையினருக்கும் போராட்டக்காரர்களுக்கும் இடையே பெரும் வன்முறை வெடித்தது.

போராட்டத்தில் பங்கேற்க விருந்த 70 களச் செயற்பாட்டாளர்களை வெள்ளிக்கிழமை இரவு பொலிஸார் கைது செய்தனர். இதனால் கோபமடைந்த மக்கள் அரசுக்கு எதிராகப் போராட்டத்தில் ஈடு பட்டனர்.

இதன் தொடர்ச்சியாக நேற்று முன்தினம் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதியான முசாபர்பாத்தில் ஆயிரக் கணக்கானோர் போராட்டத்தில் குதித்தனர். போராட்டத்தைக் கலைக்க பாதுகாப்புப் படையினர் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசினர். மேலும் தடியடி நடத்தி கூட்டத்தைக் கலைக்க முயன்றனர். இதனால் அங்கு பெரும் வன்முறை வெடித்தது. (எ)





# இம்முறை 50 இடங்களில்கூட காங்கிரஸ் வெற்றி பெறாது

ஒடிசா, மே 13

பாராளுமன்ற மக்களவைத் தேர்தலில் காங்கிரஸ் இம்முறை 50 இடங்களில் கூட வெற்றி பெறாது என்று ஒடிசாவில் நடந்த தேர்தல் பிரசாரத்தில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

ஒடிசா மாநிலம் கந்தமால் மற்றும் போலாங்கிர் மக்களவை தொகுதிகளில், பா. ஜ. க. சார்பில் நடந்த தேர்தல் பிரசார பொதுக்கூட்டங்களில் பிரதமர் மோடி பங்கேற்றார். இதன் போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

பாராளுமன்றத் தேர்தலில் எதிர்க்கட்சி அந்தஸ்தை பெறுவதற்கான 10 சதவீத இடத்தில் கூட காங்கிரஸால் வெற்றிபெற முடியாது. இன்னும் சொல்லப் போனால் 50 இடங்களில்கூட அக்கட்சி வெற்றி பெறாது.

காங்கிரஸ் கட்சியின் இளவரசர் கடந்த 2014 ஆம் ஆண்டில் எழுதப்பட்ட அதே குறிப்பையே இன்று வரை வாசித்து வருகிறார். எழுதி வைத்துக் கொள்ளுங்கள், இந்த முறை தேசிய ஜனநாயகக் கூட்டணி 400 இடங்களுக்கு மேல் வெற்றி பெற்று அனைத்துச் சாதனைகளையும் முறியடிக்கும் - என்றார். (எ)

# இந்தோனேஷியாவில் கோர விபத்து பட்டமளிப்புக்கு சென்ற 11 பேர் பலி!

ஜகார்த்தா, மே 13

இந்தோனேஷியாவின் மேற்கு ஜாவா மாகாணத்தில் பேருந்து விபத்துக்குள்ளானதில் 11 பேர் உயிரிழந்தனர்.

பட்டமளிப்பு விழாவுக்காக மாணவர்களை ஏற்றிச் சென்ற பேருந்து ஒன்று இவ்வாறு விபத்துக்குள்ளானதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.



பேருந்து கட்டுப்பாட்டை இழந்து பல கார்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் மீது மோதி விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த விபத்தில் 53 பேர் காயமடைந்து மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

உயிரிழந்தவர்களில் பெரும்பாலானோர் பட்டமளிப்பு விழாவுக்காக பயணித்த மாணவர்கள் எனத் தெரியவந்துள்ளது.

இந்த விபத்து ஏற்படுவதற்கு முன்னர் பேருந்தின் பிரேக் செயலிழந்திருக்கலாம் என போக்குவரத்து பொலி ஸார் சந்தேகம் வெளியிட்டுள் ளதுடன், சம்பவம் தொடர் பில் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# அணுகுண்டுகளை தயாரிப்போம்: இஸ்ரேலுக்கு ஈரான் எச்சரிக்கை

டெஹ்ரான், மே 13

'தேவைப்பட்டால் அணு குண்டுகளைத் தயாரிப்போம்' என்று ஈரான் மதத் தலைவர் ஐயத்துல்லா அலி காமெனியின் உதவியாளர் கமால் கராசி இஸ்ரேலுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அணுகுண்டை உருவாக்கும் முடிவு இதுவரை எங்களிடம் இல்லை. ஆனால் ஈரானுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டால், எங்கள் இராணுவக் கோட்பாட்டை மாற்றுவதைத் தவிர வேறு வழியில்லை. இஸ்ரேல் எங்களது அணுசக்தி நிலையங்கள் மீது தாக்குதல் நடத்தினால், எங்கள் இராணுவ நிலைப்பாட்டை மாற்றி அணுகுண்டுகள் தயாரிப்போம்" என்று அவர் கூறியுள்ளார். ஏற்கெனவே இஸ்ரேல் - ஈரான் இடையே போர் பதற்றம் நிலவிவரும் நிலையில் ஈரான் தலைவரின் ஆலோசகரின் இந்த அறிவிப்பு உலக நாடுகளின் கவனத்தை ஈர்த்துள்ளது.



குறிப்பாக ஈரானின் நடவடிக்கைகளுக்கு சர்வதேச அணு சக்தி முகமை தலைவர் ரபேல் கிராஸி தனது அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளார். மேலும், தற்போதைய நிலவரம் திருப்தியளிப்பதாக இல்லை. நாம் கிட்டத்தட்ட ஒரு பதற்றமான சூழலில் நிற்கிறோம். இது உடனடியாக மாற்றப்பட வேண்டும்- என்றார்.

இஸ்ரேல் மீது காஸாவிலுள்ள ஹமாஸ் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர். இதற்குப் பதிலடியாக காஸாவுக்குள் நுழைந்து இஸ்ரேல் தாக்குதல் நடத்தியது. இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் செங்கடல் பகுதியில் இஸ்ரேலுக்கு செல்லும் சரக்குக் கப்பல்கள் மீது ஹவுதி தீவிரவாதிகள் ட்ரோன் தாக்குதலில் ஈடுபட்டு வந்தனர்.

இந்த ஹவுதி தீவிரவாதிகளுக்கு ஈரான் இராணுவம் ஆதரவு அளித்து வந்தது. இதனால் சிரியா தலைநகர் டமாஸ்கஸிலுள்ள ஈரான் தூதரக வளாகத்தில் ஈரான் இராணுவ அதிகாரிகள் தங்கியிருந்த கட்டடத்தின் மீது இஸ்ரேல் ஏவுகணைத் தாக்குதல் நடத்தியது. இதில் ஈரான் இராணுவ உயர் அதிகாரிகள் 2 பேர் உட்பட 16 பேர் உயிரிழந்தனர். இதற்குப் பதிலடி கொடுக்கப்படும் என ஈரான் கூறியிருந்தது. இந்நிலையில் ஏப்ரல் மாதம் இஸ்ரேல் மீது ஈரான் தாக்குதல் நடத்தியது. இதனால் இரு நாடுகள் இடையே மோதல் போக்கு அதிகரித்து வருகிறது. (எ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



## அயர்லாந்திடம் பாகிஸ்தான் அதிர்ச்சி தோல்வி

டப்ளின், மே 13

ரி - 20 உலகக் கிண்ணப் போட்டித் தொடர் நெருங்கும் நிலையில் அயர்லாந்துக்கு எதிரான ரி - 20 சர்வதேச போட்டியில் பாகிஸ்தான் அணி அதிர்ச்சித் தோல்வியடைந்தது.

டப்ளினில் நடந்த முதல் ரி - 20 போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 5 விக்கெட்கள் இழப்புக்கு 182 ஓட்டங்கள் எடுத்தது. இந்நிலையில் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய அயர்லாந்து அணி 19. 5 ஓவர்களில் 183 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. சுமார் 15 ஆண்டுகளுக்குப் பிறகு இரு அணிகளும் ரி - 20 போட்டியில் விளையாடின.

2007 ஆம் ஆண்டு ஐ. சி. சி. 50 ஓவர் உலகக் கிண்ணத் தொடரில் அயர்லாந்திடம் தோல்வியடைந்த பாகிஸ்தான் தொடரிலிருந்தே வெளியேறியது.

இந்நிலையில் அயர்லாந்திடம் தற்போது அடைந்த தோல்வி மேற்கு இந்திய தீவுகளில் நடைபெறும் ரி - 20 உலகக் கிண்ணப்போட்டிக்கு முன்னதாக பாகிஸ்தான் அணியினருக்கு பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. அத்தோடு அயர்லாந்து, இந்தியா மற்றும் பாகிஸ்தான் அணிகள் குரூப் - ஏ இல் சேர்க்கப்பட்டுள்ளன. இதுவும் பாகிஸ்தான் அணிக்கு மேலும் சிக்கலை அதிகரித்துள்ளது.

அயர்லாந்துடன் நடந்த போட்டியில் பாகிஸ்தான் அணித் தலைவர் பாபர் அஸாம் 43 பந்துகளில் 57 ஓட்டங்கள் பெற்றார். சயிம் அயூப் 45, பகர் ஜமான் 20 ஓட்டங்கள் எடுத்தனர். இப்திகார் அகமது கடைசியில் இறங்கி 15 பந்துகளில் 3 பௌண்ட்ரிகள், 3 சிக்ஸர்களுடன் 37 ஓட்டங்களையும் ஷஹீன் அப்ரிடி 8 பந்துகளில் 14 ஓட்டங்களையும் விளாசியதில் அணியின் ஓட்ட எண்ணிக்கை 182 ஓட்டங்களுக்கு கொண்டு செல்லப்பட்டது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய அயர்லாந்து அணிக்கு கடைசி 4 ஓவர்களில் 40 ஓட்டங்கள் தேவை என்ற கட்டத்தில் கொஞ்சம் பரபரப்புக்குச் சென்றது. நசீம் ஷா, ஷஹீன் அப்ரீடிக்கு தலா ஒரு ஓவர் மீதமிருந்தது. இருந்தும் வெற்றி பெற முடியாமல் போனதுதான் பாகிஸ்தானின் சோகம்.

கடைசி ஓவரில் 11 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில் அப்பாஸ் அப்ரிடியால் பாகிஸ்தானுக்கு வெற்றியை பெற்றுக்கொடுக்க முடியவில்லை. ஒரு பந்து மீதமிருக்க அயர்லாந்து ஓர் அரிய வெற்றியைப் பெற்றது. ஆட்ட நாயகனாக 55 பந்துகளில் 77 ஓட்டங்கள் பெற்றுக் கொடுத்து அயர்லாந்தின் வெற்றிக்குப் பெரும் பங்காற்றிய பால்பர்னி தெரிவு செய்யப்பட்டார். 3 போட்டிகள் கொண்ட இந்தத் தொடரில் அயர்லாந்து 1- 0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது. (எ)

## லோர்ட்ஸ் டெஸ்ட் போட்டியுடன் ஓய்வுபெறுகிறார் ஆண்டர்சன்



லண்டன், மே 13

மேற்கு இந்திய தீவுகள் கிரிக்கெட் அணி எதிர்வரும் ஜூலை மாதம் இங்கிலாந்துக்கு சுற்றுப் பயணம் செய்து 3 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடத் திட்டமிட்டுள்ளது. முதல் டெஸ்ட் போட்டி ஜூலை 10 ஆம் திகதி லோர்ட்ஸ் மைதானத்தில் தொடங்குகிறது. இந்நிலையில் இந்த ஆட்டத்துடன் சர்வதேச கிரிக்கெட் அரங்கிலிருந்து ஓய்வு பெறுவதாக இங்கிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சாளரான ஜேம்ஸ் ஆண்டர்சன் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் அறிவித்துள்ளார்.

42 வயது ஜேம்ஸ் ஆண்டர்சன் 2003 ஆம் ஆண்டு லார்ட்ஸில் நடைபெற்ற சிம்பாவே அணிக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் அறிமுகமானார். இதுவரை 187 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ள ஆண்டர்சன் 700 விக்கெட்களை வீழ்த்தியுள்ளார். டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் 700 விக்கெட்களைக் கைப்பற்றியுள்ள முதல் வேகப்பந்து வீச்சாளர் என்ற சாதனை ஆண்டர்சன் வசமே உள்ளது. ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் 194 போட்டிகளில் விளையாடி 269 விக்கெட்கள் கைப்பற்றியுள்ளார். இதேவேளை 19 சர்வதேச ரி - 20 போட்டிகளில் பங்கேற்று 18 விக்கெட்களை வீழ்த்தியுள்ளார் ஆண்டர்சன். (எ)

# 5 விக்கெட் வித்தியாசத்தில் சென்னை இலகு வெற்றி


சென்னை, மே 13

142 ஓட்டங்களுக்குள் ராஜஸ்தான் அணியைச் சுருட்டிய சென்னை அணி 5 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

ஐ. பி. எல். 2024 தொடரின் லீக் போட்டிகள் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளன. இந்நிலையில் சென்னை சேப்பாக்கம் எம். ஏ. சிதம் பரம் மைதானத்தில் நேற்று நடந்த போட்டியில் சென்னை சூப்பர் கிங்ஸ் - ராஜஸ்தான் றோயல்ஸ் அணிகள் மோதின. இந்தப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வென்ற ராஜஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

ராஜஸ்தான் அணிக்கு ஆரம்ப வீரர்களாக களமிறங்கிய யஷஸ்வி ஜெய்ஸ்வால் மற்றும் ஜாஸ் பட்லர் முறையே 24 மற்றும் 21 ஓட்டங்களை எடுத்த நிலையில் ஆட்டமிழந்தனர். அடுத்து களமிறங்கிய அணித் தலைவர் சஞ்சு சாம்சன் 15 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

இவரைத் தொடர்ந்து களமிறங்கிய ரியான் பராக் மற்றும் துருவ் ஜூரெல் பொறுப்புடன் விளையாடி ஓட்டங்களைச் சேர்த்தனர். ஜூரெல் 28 ஓட்டங்களில் ஆட்டமிழக்க, அடுத்து வந்த ஷிபம் தூபே ஓட்டம் ஏதும் எடுக்காமல் வெளியேறினார். ரியான் பராக் ஆட்டமிழக்காமல் 47 ஓட்டங்கள் குவித்தார்.



இதனால் ராஜஸ்தான் அணி 20 ஓவர்கள் முடிவில் 5 விக்கெட்களை இழந்து 141 ஓட்டங்கள் எடுத்தது. சென்னை சார்பில் சிமர்ஜித் சிங் மூன்று விக்கெட்களையும், துஷார் தேஷ்பாண்டே இரண்டு விக்கெட்களையும் கைப்பற்றினர்.

142 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சென்னை அணிக்கு ஆரம்ப வீரராக களமிறங்கிய ரச்சின் ரவீந்திரா 18 பந்துகளில் 27 ஓட்டங்கள் சேர்த்து ஆட்டமிழந்தார். அடுத்து வந்த டேரில் மிட்செல் 22 , மொயின் அலி 10, ஷிவம் துபே 18 ஓட்டங்கள் சேர்த்தனர்.

இந்நிலையில் 18. 2 ஓவர்கள் முடிவில் சென்னை அணி 5 விக்கெட்களை இழந்து 145 ஓட்டங்கள் எடுத்து 5 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. அணித் தலைவர் ருதுராஜ் கெய்க்வாட் இறுதி வரை ஆட்டமிழக்காமல் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி 42 ஓட்டங்கள் குவித்தார்.

ராஜஸ்தான் அணி சார்பில் ரவிச்சந்திரன் அஸ்வின் 2 விக்கெட்களையும், பர்கர் மற்றும் சாஹல் தலா ஒரு விக்கெட் வீழ்த்தினர். (எ)


### 18 ஓட்டங்கள் வித்தியாசத்தில்

# மும்பையை வீழ்த்திய கொல்கத்தா பிளேஓவ் சுற்றுக்கு முன்னேறியது

கொல்கத்தா, மே 13

மும்பை இந்தியன்ஸ் அணிக்கு எதிரான ஐ. பி. எல். லீக் ஆட்டத்தில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி 18 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்று பிளேஓவ் சுற்றுக்குத் தகுதிபெற்றது.

இந்தப் போட்டிக்கு முன் கொல் கத்தா ஈடன் கார்டன் மைதா னத்தில் மழை பெய்ததால் நாணயச் சுழற்சிக்கு தாமதம் ஏற்பட்டது. மழை விட்டதை அடுத்து 16 ஓவர்களாக குறைக்கப்பட்டு இரவு 9 மணிக்கு நாணயச்சுழற்சி நடந்தது. இதில் வென்ற மும்பை அணி பந்து வீச்சை தெரிவு செய்தது. இதன்படி, முதல் 5 ஓவர்கள் மட்டும் பவர் பிளே, ஒரு பந்துவீச்சாளர் அதிக பட்சம் 4 ஓவர்கள் பந்து வீசலாம், 3 பந்து வீச்சாளர்கள் அதிகபட்சம் 3 ஓவர்கள் வீசலாம் என்ற விதி முறைகளுடன் போட்டி தொடங்கியது.



கொல்கத்தா அணிக்குத் தொடக்கம் சரியாக அமையவில்லை. சுனில் நரேன் ஓட்டம் எதுவும் இன்றி விக்கெட்டை பறிகொடுத்து வெளியேறினார். பிலிப் சால்ட் 6 ஓட்டங்கள் மட்டும் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார். வெங்கடேஷ் ஐயர் சற்று நம்பிக் கையளித்தார். அவர் 42 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார். நிதிஷ் ராணா 33, ரஸல் 24, ரிங்கு சிங் 20 ஓட்டங்கள் எடுத்தனர்.

இதனால் நிர்ணயிக்கப்பட்ட 16 ஓவர்களில் கொல்கத்தா அணி 7 விக்கெட்கள் இழப்புக்கு 157 ஓட்டங்கள் எடுத்தது.

158 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கைத் துரத்திய மும்பை இந்தியன்ஸ் அணிக்கு இஷான் கிஷன், திலக் வர்மாவைத் தவிர ஏனைய வீரர்கள் யாரும் கைகொடுக்கவில்லை. இஷான் கிஷன் 40 ஓட்டங்கள் எடுத்தார். ரோஹித் சர்மா 19, சூரியகுமார் யாதவ் 11, ஹர்திக் பாண்டியா 2 ஓட்டங்கள் என சொற்ப ஓட்டங்களுக்கு விக்கெட்டை பறிகொடுத்தனர்.

இறுதிக்கட்டத்தில் திலக் வர்மா போராடினார். கடைசி 10 பந்துகளில் 39 ஓட்டங்கள் வெற்றிக்குத் தேவை என்ற நிலையில் களத்துக்குள் வந்த நமன் தீர் அதிரடியாக சிக்ஸர், பௌண்ட்ரிகள் விளாசினார். கடைசி ஆறு பந்துகளில் 22 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில் விக்கெட்டை பறிகொடுத்தார் நமன் தீர். சில நொடிகளிலேயே திலக் வர்மா 32 ஓட்டங்களில் ஆட்டமிழந்து வெளியேறினார்.

இதனால், 16 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட்கள் இழப்புக்கு 139 ஓட்டங்கள் மட்டும் எடுத்து தோல்வியைத் தழுவியது மும்பை இந்தியன்ஸ் அணி. இதேவேளை, 18 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற கொல்கத்தா அணி பிளேஓவ் சுற்றுக்குத் தகுதிபெற்றது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முள்ளிவாய்க்கால்...

வருகை தரவுள்ளார். அன்றைய தினம் சர்வதேச மன்னிப்புச் சபையில் கொழும்பு அலுவலக செயற்பாட்டாளர்களைச் சந்தித்துப் பேசவிருக்கும் அவர், வெள்ளிக்கிழமை முள்ளிவாய்க்காலுக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

அங்கு சில முக்கிய இரகசிய சந்திப்புக்களை நடத்துவதற்கு உத்தேசித்திருக்கும் அக்னெஸ் கலமார்ட், யுத்தத்தில் உயிரிழந்தவர்களை நினைவுகூரும் வகையில் சனிக்கிழமை நடைபெறவுள்ள முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்விலும் பங்கேற்கவுள்ளார்.

அதனைத் தொடர்ந்து எதிர்வரும் 20ஆம் திகதி கொழும்பில் ஊடகவியலாளர்களை சந்திக்கவுள்ள அவர், நாட்டின் சமகால மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பான தனது அவதானிப்புக்களைப் பகிர்ந்துகொள்ளவுள்ளார்.

அதேவேளை செயலாளர் நாயகம் அக்னெஸ் கலமார்ட் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை சந்திப்பதற்கு நேரம் வழங்குமாறு மன்னிப்புச் சபையின் கொழும்பு அலுவலகம் ஓரிரு மாதங்களுக்கு முன்னரே ஜனாதிபதி செயலகத்திடம் கோரியிருக்கின்ற போதிலும், அதற்கு இன்னமும் உரிய பதில் வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (அ-எ)

## கப்பல்...

இதையடுத்து "செரியாபாணி" கப்பலுக்கு மாற்றாக "சிவகங்கை" என்ற பெயர் கொண்ட மற்றொரு பயணிகள் கப்பல் நாகை-இலங்கை இடையே பயணத்தை தொடங்க உள்ளதாக தகவல் வெளியானது.

இந்நிலையில் நாகையில் இருந்து இலங்கைக்கு இன்று தொடங்கவிருந்த கப்பல் போக்குவரத்து சேவை மீண்டும் தள்ளிவைக்கப்பட்டுள்ளது.

நாகைக்கு வரவேண்டிய பயணிகள் கப்பல் தாமதமானதால் எதிர்வரும் 17 ஆம் திகதி வரை இச் சேவை தள்ளிவைக்கப்பட்டுள்ளது. இந்த அறிவிப்பால் யாழ்ப்பாணம் செல்லவிருந்த சுற்றுலா பயணிகள் மற் றும் வர்த்தகர்கள் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

முன்பதிவு செய்த பயணிகள் 17 ஆம் திகதி பயணிக்கலாம் அல்லது பயண திகதியை மாற்றிக்கொள்ளலாம் அல்லது கட்டணத்தை திரும்ப பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## தமிழ்த்...

ஒன்றை ஸ்தாபிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்காக சிவில் அமைப்புக்களின் சார்பில் வேலன் சுவாமிகள், அகத்தியர் அடிகளார், திருகோணமலை மறை மாவட்ட ஆயர் நோயல் இம்மானுவேல், பேராசிரியர் கே. ரி. கணேசலிங்கம், கலாநிதி. சிதம்பரநாதன், நிலாந்தன், யோதிலிங்கம், யதீந்திரா, சிவயோகநாதன், நரேந்திரசிங்கம், சுந்தரேஸ்வரர் மற்றும் பல்கலைக்கழக சமூகப் பிரதிநிதிகள் இருவர் கொண்ட செயற்குழு உருவாக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவானது அடுத்துவரும் நாட்களில் அனைத்து அரசியல் கட்சிகளையும் சந்தித்து கலந்துரையாடல்களை முன்னெடுப்பதற்குத் தீர்மானித்துள்ளது. குறிப்பாக தமிழ் பொது வேட்பாளர் விடயத்தில் எதிர்மறையான நிலைப்பாட்டையுடைய தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் மக்கள் பிரதிநிதிகளையும் நேரில் சந்திப்பதற்கு இந்தக் குழு திட்டமிட்டுள்ளது.

இவ்வாறு அரசியல் கட்சிகளுடனான கலந்துரையாடல்களை அடுத்து பொதுக் கட்டமைப்பொன்று ஸ்தாபிக்கப்படவுள்ளதோடு, பொதுக்கட்டமைப்பின் கீழ் பத்து உபகுழுக்கள் உருவாக்கப்படவுள்ளன.

இந்த உபகுழுக்கள் அரசியல் கட்சி, சின்னம், வேட்பாளர், தேர்தல் விஞ்ஞாபனம், நிதி, பிரசாரம் உள்ளிட்ட விடயங்களையும் கையாளும் வகையில் செயற்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (எ)

# 1200 ரூபா அடிப்படை சம்பள யோசனையை அரசாங்கம் ஒருபோதும் அங்கீகரிக்காது

## தொழில் அமைச்சர் மனுஷ நாணயக்கார உறுதி

அம்பாந்தோட்டை, மே 13

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள விவகாரத்தில் எதிர்வரும் 15 ஆம் திகதி புதன்கிழமைக்கு முன்னர் முதலாளிமார் சம்மேளனம் இறுதித் தீர்மானத்தை அறிவிக்காவிட்டால் 1350 ரூபாய் அடிப்படைச் சம்பளத்துடன் 1700 ரூபாயை நாளாந்த சம்பளமாக நிர்ணயித்து மீண்டும் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படும் என்று தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

1200 ரூபாயை அடிப்படைச் சம்பளமாக வழங்குவதாகக் குறிப்பிட்டுள்ள முதலாளிமார் சம்மேளனம் முன்வைத்துள்ள யோசனையை அரசாங்கம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது என்றும் அமைச்சர் கூறினார்.

அம்பாந்தோட்டை - அங்குனுகொலபெலஸ்ஸ பிரதேசத்தில் சனிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

1350 ரூபாய் அடிப்படைச் சம்பளத்துடன் 1700 ரூபாயை பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளாந்த சம்பளமாக வழங்குமாறு கடந்த ஏப்ரல் 30 ஆம் திகதி தொழில் ஆணையாளரால் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது. மே முதலாம் திகதி சர்வதேச தொழிலாளர் தினத்தன்று நாம் இதனை உத்தியோகபூர்வமாக அறிவித்தோம்.

பல சுற்றுப் பேச்சுக்களை முன்னெடுத்த பின்னரே நாம் இந்தத் தீர்மானத்தை எடுத்தோம். எனினும் தற்போது சம்பளம் கிடைக்குமா? கிடைக்காதா? எனப் பலரும் கேள்வியெழுப்புகின்றனர். வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி தொடர்பில் முதலாளிமார் சம்மேளனத்துக்கு ஆட்சேபனையை வெளியிட 15 ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

ஆனால் பெருந்தோட்ட முதலாளிமார் சம்மேளனம் அதன் யோசனையை எம்மிடம் முன்வைத்துள்ளது. அதற்கமைய 1350 ரூபாய் அடிப்படைச் சம்பளமாக அன்றி, 1200 ரூபாயை அடிப்படைச் சம்பளமாக வழங்க இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னர் அவர்கள் இவ்வாறு குறிப்பிட்டிருக்கவில்லை. எவ்வாறிருப்பினும் 1350 ரூபாய் அடிப்படைச் சம்பளமாக வழங்கப்பட வேண்டும் என்பதில் நாம் உறுதியாகவுள்ளோம்.

எஞ்சிய தொகை வரவுக்கேற்பவும், மேலதிக கிலோவுக்கமையவும் ஒட்டு மொத்தமாக 1700 ரூபாயாக அமைய வேண்டும். முதலாளிமார் சம்மேளனத்தால் முன்வைக்கப்பட்டுள்ள யோசனையை நாம் பெருந்தோட்டத் தொழிற்சங்கங்களுக்கும் அனுப்பி வைத்திருக்கின்றோம். 1200 ரூபாய் அடிப்படைச் சம்பளம் என்ற யோசனைக்கு அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளதாக முதலாளிமார் சம்மேளன பேச்சாளர் தெரிவித்துள்ளதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அது முற்றிலும் பொய்யான செய்தியாகும். அந்த யோசனைக்கு நாம் ஒருபோதும் இணக்கம் தெரிவிக்கவில்லை. அவர்களால் முன்வைக்கப்பட்டுள்ள யோசனையை தொழிற்சங்கங்களிடம் சமர்ப்பித்துள்ளதை மாத்திரமே நாம் செய்துள்ளோம். எனவே 15 ஆம் திகதிக்கு முன்னர் அவர்கள் இணக்கப்பாட்டுக்கு வராவிட்டால் 1350 ரூபாய் அடிப்படைச் சம்பளம் உள்ளடங்களாக 1700 ரூபாய் மொத்த சம்பளம் என அறிவித்து மீண்டும் வர்த்தமானி அறிவித்தலை வெளியிடுவோம்- என்றார். (எ)

# காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளால் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டது

வவுனியா, மே 13



முள்ளிவாய்க்கால் 15 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு வவுனியாவில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கி வைக்கப்பட்டது.

வவுனியா மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் நகரசபை பொங்குதமிழ் நினைவுத் தூபி முன்பாக நேற்று ஞாயிற்றுக் கிழமை இவ்வாறு கஞ்சி வழங்கப்பட்டது.

2009 ஆம் ஆண்டு இறுதி யுத்தத்தின் போது மக்கள் முள்ளிவாய்க்கால் கஞ்சியை உணவாக உட்கொண்டே உயிர்பிழைத்தனர். அதனை நினைவு கூர்ந்து அடுத்த தலைமுறைக்கு வரலாற்றை கடத்தும் நோக்குடன் இவ்வாறு கஞ்சி வழங்கப்பட்டது.

வீதியால் சென்ற பலரும் அதனை வாங்கிப் பருகிச் சென்றனர்.

## திருநாள் திருப்பலி

யாழ்ப்பாணம், மே 13

நாவாந்துறை புனித பத்திமா அன்னையின் திருநாள் திருப்பலி இன்று திங்கட்கிழமை மாலை 6 மணிக்கு இடம்பெறவுள்ளது. (எ)

## வவுனியாவில்...

உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் மற்றும் போராளிகளின் குடும்ப உறுப்பினர்கள், பொதுமக்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (எ)

## நாட்டின்...

அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார். (அ)

## சம்பூரில்...

வாக்குவாதத்தில் ஈடுபட்டதோடு நீதிமன்ற தடை உத்தரவை வாங்க மறுத்ததாகவும் தெரியவருகின்றது.

எனினும் மக்கள் முள்ளிவாய்க்கால் கஞ்சியை காய்ச்சி பொதுமக்களுக்கு பரிமாறி முள்ளிவாய்க்காலில் உயிரிழந்த பொது மக்களை நினைவு கூர்ந்திருந்தனர். (அ)

## பொருளாதார ...

அலரிமாளிகையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற சர்வதேச தாதியர் தின நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

ஏற்றுமதி பொருளாதாரத்துடன் நாட்டின் பொருளாதாரத்தை விரைவான அபிவிருத்தியை நோக்கிக் கொண்டு செல்வதற்கு நான்கு பிரதான சட்டங்கள் அறிமுகப்படுத்தப்படும். மத்திய வங்கியை சுயாதீனமாகச் செயல்பட அனுமதிக்கும் மத்திய வங்கிச் சட்டம் ஏற்கனவே நிறைவேற்றப்பட்டுள்ளது. அரச கடன் முகாமைத்துவச் சட்டம், அரச நிதிச் சட்டம், பொருளாதார பரிமாற்றச் சட்டம் உள்ளிட்ட சட்டமூலங்கள் இந்த ஜூன் மாதம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கு இந்த புதிய சட்டங்களை நிறைவேற்ற அனைவரின் ஆதரவையும் எதிர்பார்க்கின்றேன். சர்வதேச நாணய நிதியம் மற்றும் இந்த நாட்டுக்கு கடன் வழங்கிய ஏனைய நாடுகளுடன் ஏற்படுத்தப்பட்டுள்ள சகல நிபந்தனைகளும் எதிர்காலத்தில் சட்டமாக கொண்டு வரப்படும் . இந்தச் சட்டங்களை நிறைவேற்றுவதிலே நாட்டின் எதிர்காலம் தங்கியிருக்கிறது. அதற்காக அனைத்துத் தரப்பினரின் ஆதரவையும் எதிர்பார்க்கின்றேன்.

நாடு பொருளாதார ரீதியாக ஸ்திரமற்ற நிலையில் இருந்தபோது, நாட்டை மீட்பதற்காக அனைத்துத் தரப்பு மக்களையும் ஒன்றிணைத்து அரசாங்கத்தை உருவாக்கியதை நினைவுகூர்ந்த ஜனாதிபதி, அந்த வேலைத்திட்டம் இன்று வெற்றியடைந்துள்ளதாகவும், புதிய சட்டங்களை நிறைவேற்றி நாட்டின் எதிர்கால பொருளாதார வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதற்கு அனைவரும் ஒன்றிணைய வேண்டுமெனவும் வலியுறுத்தினார்.

தற்பொழுது பணத்தை அச்சிட முடியாது. பணத்தை அச்சிட மாட்டோம் என்று சர்வதேச நாணய நிதியத்துடன் ஒப்பந்தம் செய்துள்ளோம். அப்படியானால் பொருளாதார வளர்ச்சி விகிதத்தை அதிகரிப்பதுதான் நமக்கு இருக்கும் ஒரே வழி. எமக்கு கடன் வழங்கிய நாடுகளுடன் தற்போது பேச்சுக்களை நிறைவு செய்து வருகின்றோம். அடுத்ததாக தனியார் கடன் வழங்குநர்களுடன் பேச்சுக்கள் நடத்தப்படும். அதன்படி, இந்த ஆண்டு வங்குரோத்து நிலையிலிருந்து முழுமையாக விடுபடுவோம். ஆனால் இந்தப் பொருளாதாரப் பிரச்னை இத்துடன் முடிவடையாது. கடன் தள்ளுபடி செய்தாலும் மிகுதியை மீளச் செலுத்த வேண்டும்.

எனவே, நமது பொருளாதாரத்தை மாற்றுவதற்காக உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம். இறக்குமதி சார்ந்த பொருளாதாரத்திற்கு பதிலாக, ஏற்றுமதி சார்ந்த பொருளாதாரத்திற்கு நாம் செல்ல வேண்டும். அந்த நிபந்தனைகளுக்கு நாங்கள் சம்மதித்துள்ளோம். அதிலிருந்து நாம் விலகிச் செல்ல முடியாது. அதிலிருந்து விலகினால், இந்த சலுகைகளை இழக்க நேரிடும். எனவே இதனை முன்னெடுத்துச் செல்ல வேண்டும்- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# தமிழ் பொது வேட்பாளர் விடயத்தில் முடிவு எடுக்க அவசரப்பட வேண்டாம்

## சம்பந்தன் வேண்டுகோள்

கொழும்பு, மே. 13

**ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தும் விடயத்தில் தீர்மானம் எடுப்பதற்கு அவசரப்படவேண்டாம் என இலங்கை தமிழ் அரசுக் கட்சி உட்பட அனைத்து தரப்பிடமும் சிரேஷ்ட தலைவரும் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சம்பந்தன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-


நாட்டின் நீண்ட வரலாற்றை பார்க்கின்றபோது பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவரே ஜனாதிபதியாக வரமுடியும் என்ற நிலைமைகள் உள்ளன.

இந்த நிலையில் தென்னிலங்கையின் தேசியக் கட்சிகள் தற்போது வரையில் உத்தியோகபூர்வமாக தங்களது ஜனாதிபதி வேட்பாளர் பற்றிய அறிவிப்புக்களைச் செய்யவில்லை.

அக்கட்சிகள் அவ்விதமான அறிவிப்புக்களை செய்வதற்கு முன்னதாக நாம் எமது நிலைப்பாட்டை முன்வைத்து வீணான குழப்பங்களை ஏற்படுத்த வேண்டிய அவசியமில்லை.

தென்னிலங்கைத் தலைவர்களில் யார் வேட்பாளர்? அவர்களின் தமிழ் மக்கள் தொடர்பான நிலைப்பாடு என்ன? அவர்களுடைய தேர்தல் விஞ்ஞாபனம் என்ன உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் ஆழமான கவனத்தைச் செலுத்த வேண்டியுள்ளது.

அந்த வகையில், நாம் அனைத்து சூழல்களையும் ஆழமாக எமது கருமங்களை முன்னெடுக்க வேண்டும். அவசரப்பட்டு எந்தவிதமான முடிவுகளையும் எடுக்க வேண்டிய அவசியமில்லை - என்றார். (அ)



# முள்ளியவளை பகுதியில் முள்ளிவாய்க்கால் கஞ்சி!

முல்லைத்தீவு, மே. 13

தமிழினப்படுகொலை வாரத்தின் முதல் நாளான நேற்று முல்லைத்தீவு முள்ளியவளை பகுதியில் முள்ளிவாய்க்கால் கஞ்சி காய்ச்சி பரிமாறப்பட்டது.

புலம்பெயர் மற்றும் தாயக உறவுகள் நினைவேந்தல் அமைப்பின் ஏற்பாட்டில் இந்த கஞ்சி பரிமாறும் நிகழ்வு நடைபெற்றது.

இதன்போது அரசியல் பிரதிநிதிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், சமூக செயல்பாட்டாளர்கள், வர்த்தகர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டு முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்குகின்ற செயல்பாடுகளில் ஈடுபட்டனர். (அ)

# சூட்சுமமாக கடத்தப்பட்ட பாலை மரக்குற்றிகள் மீட்பு!

யாழ்ப்பாணம், மே. 13

சாவகச்சேரி - சரசாலைப் பகுதியில் மண்ணுக்குள் வைத்து சூட்சுமமான முறையில் கடத்தப்பட்ட பாலை மரக் குற்றிகள் நேற்று சாவகச்சேரி பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

சாவகச்சேரி பொலிஸ் நிலைய மூத்த பொலிஸ் பரிசோதகர் செனவிரத்ன தலைமையில் நேற்று காலை இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

டிப்பரில் இந்த கடத்தல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டபோது பொலிஸார் சுற்றிவளைப்பு மேற்கொண்டனர். இந்நிலையில் பொலிசாரை மிரட்டிவிட்டு டிப்பர் சாரதி தப்பிச் சென்றுள்ளார்.

மீட்கப்பட்ட மரக் குற்றிகளுடன் டிப்பர், சாவகச்சேரி பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. (அ)

# ரூ.1700 பொய் வாக்குறுதியென 10ஆம் திகதி தெரிந்துவிட்டது!

கொழும்பு, மே. 13

மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாள் சம்பளமாக ஆயிரத்து 700 ரூபா வழங்கப்படும் என்ற ஜனாதிபதியின் அறிவிப்பானது தேர்தலை இலக்கு வைத்து வழங்கப்பட்டுள்ள தேர்தல் வாக்குறுதியாகும் - என்று தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான பழனி திகாரம்பரம் தெரிவித்தார்.

" தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரத்து 700 ரூபா வழங்கப்படும் என கொட்டகலையில் நடைபெற்ற மே தினக் கூட்டத்தின்போது ஜனாதிபதி உறுதியளித்தார். இதனையடுத்து அப்பாவி மக்களை வைத்து சிலர் பாற்சோறு சமைத்து கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர். ஜனாதிபதி கூறியது பொய் என்பது 10 ஆம் திகதி தெரியவந்துவிட்டது.

அடுத்த ஜனாதிபதி தேர்தலில் தன்னால் வெற்றிபெற முடியாது என்ப ரணிலுக்கு தெரியும். அதனால்தான் மலையக மக்களை ஏமாற்றி வாக்குகளைப் பெறும் நோக்கி, இந்த போலி உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு மக்களை ஏமாற்றும் வேலை தொடர்கின்றது. பெருந்தோட்ட தொழிலாளர்களை சிறுதோட்ட உரிமையாளர்களாக்க வேண்டும். அதற்குரிய நடவடிக்கை எமது ஆட்சியில் முன்னெடுக்கப்படும்." - எனவும் திகாம்பரம் குறிப்பிட்டார். (அ)

# பசுக் கொலைக்கு ஏதிராக யாழில் வெடித்த போராட்டம்!

யாழ்ப்பாணம், மே. 13

நல்லை ஆதீனத்திற்கு முன் பசுக் கொலைக்கு ஏதிராக கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று நேற்று காலை இலங்கை சிவசேனை தலைவர் மறவன்புலவு க.சச்சிதானந்தன் தலைமையில் நடைபெற்றது.

காசாவுக்கு ஒரு நீதியா? இந்துக்களுக்கு இன்னொரு நீதியா? நிறைவேற்று நிறைவேற்று பசுவதைத் தடைச் சட்டத்தினை நிறைவேற்று, இலங்கை சிவபூமி முகமதியரே புனித சின்னத்தினை சிதைக்காதீர், பொஸிசாரே பசுத்திருடர்களை கைது செய், அறுக்காதே அறுக்காதே கோமாதாவினை அறுக்காதே, கோமாதாவினை வெட்டி இந்து சமயத்தவர்களின் மனதில் ஈட்டிபாய்ச்சாதே என்ற பாததைகள் ஏந்திய வண்ணம் கோசங்கள் இட்டு தமது எதிர்ப்பு போட்டத்தினை முன்னெடுத்தனர்.



இவ் கவனயீர்ப்பு போராட்டத்தில் தமது ஆதரவினை வழங்க சிவபூமி அறக்கட்டளை தலைவரும், தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான தலைவருமான கலாநிதி ஆறு. திருமுருகன், யாழ்ப்பாணம் மத்தியஸ்தான நாகவிகாரை விகாராதிபதி விமலரத்தன தேரர், இந்து சமயப்பேரவையின் தலைவர் சக்தி கீரிவன் மற்றும் இலங்கை சிவசேனை சிவத்தொண்டர்கள் பலரும் கலந்து கொண்டு தமது ஆதரவினை வழங்கினர். (அ)

# தமிழர் நீதிக்கான பொறிமுறையை சர்வதேசத்துக்கு வழங்க முடியாது!

## வெளிவிவகார அமைச்சர் அதிரடி

கொழும்பு, மே. 13

காணாமல் போனோர் தொடர்பில் அவர்களின் உறவினர்கள் நீதி கோரி போராடுகின்றனர். அதற்கான பொறிமுறையொன்றை உருவாக்குவதில் அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளது. ஆனால் அந்த பொறிமுறையை உருவாக்குவ தற்கான பொறுப்பினை சர்வதேசத்துக்கு வழங்க முடியாது என்று வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

கடந்த செவ்வாயன்று பாராளுமன்ற உரையில் எம்.ஏ.சுமந்திரன், உள்ளக பொறிமுறையின் மூலம் ஒருபோதும் தீர்வு கிடைக்காது என்றும், ரோம் சட்டத்திற்கமைய அரசாங்கம் செயற்பட வேண்டும் என்றும் வலியுறுத்தி இருந்தார்.

இது தொடர்பில் தெளிவுபடுத்தும் போதே வெளிவிவகார அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பிரச்னைகள் உள்ளன. காணாமல் போனோர் அலுவலகத்தில் சென்று தமது உறவுகளை இழந்த மக்கள் அவர்களை தேடித் தருமாறு கோருகின்றனர்.

அதற்கான பொறிமுறையொன்றை உருவாக்குவது தொடர்பில் அவதானம் செலுத்தியுள்ளோம். ஆனால் அந்த பொறி முறையை உருவாக்குவதற்கான பொறுப்பினை சர்வதேசத்துக்கு வழங்கமுடியாது.

அதனை சர்வதேசத்துக்கு வழங்கினால் உள்நாட்டவர்கள் அதனை ஏற்றுக் கொள்ளப் போவதில்லை. நல்லிணக்க பொறிமுறையானது தமிழ் மக்கள் மாத்திரமின்றி சிங்கள மக்களும் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்க வேண்டும். இதனை சர்வதேசத்துக்கு வழங்க முடியாது. அது நடைமுறையில் யதார்த்தமானதல்ல - என்றார். (அ)

# சப்புகஸ்கந்தை எரிபொருள் சுத்திகரிப்பு நிலையத்தின் மீது நேற்று மின்னல் தாக்கம்

கொழும்பு, மே. 13

சப்புகஸ்கந்தை எரிபொருள் சுத்திகரிப்பு நிலையத்தின் மீது மின்னல் தாக்கியுள்ளதை அடுத்து, தீ பரவல் ஏற்பட்டுள்ளது.

எரிபொருள் சுத்திகரிப்பு நிலையத்தில் புகையை வெளியேற்றும் எரிவாயு குழாய் மீதே மின்னல் தாக்கியுள்ளது.

இந்த சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது.

எவ்வாறாயினும் தீ உடனடியாக கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

அத்துடன் மின்னல் தாக்கம் காரணமாக எவருக்கும் எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 13.05.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org